16.07.2015

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## வரத்து குறைவால் சின்ன வெங்காயம் விலை அதிகரிப்பு

திண்டுக்கல்: திண்டுக்கல் சந்தையில் கிலோ ரூ.43க்கு விற்ற சின்ன வெங்காயம் வரத்து குறைவால் கிலோ ரூ.53க்கு விற்பனையாகிது.தமிழகத்தில் சின்ன வெங்காயம் உற்பத்தியில் 50 சதவீதம் பங்கை திண்டுக்கல் மாவட்டம் பெற்றுள்ளது. இங்கு, திருச்சி, துறையூர், வேடசந்துார், குஜிலியம்பாறை உள்ளிட்ட பகுதிகளிலிருந்து வெங்காயம் வரத்து உள்ளது. வாரத்தில் 2 நாட்கள் இதற்கான சந்தை நடக்கிறது. இதில், நாள் ஒன்றுக்கு 16 டன் முதல் 20 டன் வரை வெங்காயம் வரும்.கடந்த 2 வாரங்களுக்கு முன் சின்னவெங்காயம் கிலோ ரூ.43க்கு விற்றது. தற்போது ஆடிமாத பண்டிகைகளால் விற்பனை கூடியுள்ளது. வரத்து வெங்காயம் குறைந்துள்ளதால் சின்ன வெங்காயம் கிலோ ரூ.53 வரை விற்கிறது.வியாபாரி கணேசன் கூறியதாவது: விதைப்பு துவங்க உள்ளதால், வரத்து குறைந்துவிட்டது. ஆடி மாத விழாக்கள், கோயில் பண்டிகைகள் உள்ளிட்டவைகளால் விலையும் கூடியுள்ளது என்றார்.

## தேனி ஆடுகளுக்கு கிராக்கி

ஆண்டிபட்டி: ஆடியை முன்னிட்டு வெள்ளாடுகளின் தேவை அதிகரித்துள்ளது. இதனால் வியாபாரிகள் ஆடு வளர்ப்பவர்களிடம் முன்பணம் கொடுத்து வருகின்றனர்.

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி தாலுகாவின் பல கிராமங்களில் விவசாயம், கால்நடை வளர்ப்பு முக்கிய தொழிலாக உள்ளது. பால்மாடுகள் வளர்ப்பில் செலவு அதிகரித்து வருவதால் விவசாயிகள் பலரும் ஆடு வளர்ப்பில் அதிக நாட்டம் செலுத்தி உள்ளனர். ஆண்டிபட்டி பகுதியில் மேற்கு தொடர்ச்சி மலை சார்ந்துள்ள வேலப்பர் கோயில், தெப்பம்பட்டி, பாலக்கோம்பை, ராயவேலுார், அழகாபுரி, ஏத்தக்கோயில், அனுப்பபட்டி, மறவபட்டி, திம்மரசநாயக்கனுார், டி.பொம்மிநாயக்கன்பட்டி உட்பட பல கிராமங்களில் ஆயிரக்கணக்கான வெள்ளாடுகள் உள்ளன. ஆடி மாதம் பிறக்க உள்ளதால் ஆட்டுக்கறிக்கான தேவை அதிகரிக்கும். இதனால் வெளியூர் வியாபாரிகள் ஆடுகளை வாங்க ஆண்டிபட்டில் முகாமிட்டு கிராமப்புறங்களில் ஆடுவளர்ப்பவர்களிடம் முன் பணம் கொடுத்து வருகின்றனர்.

## மதுரை, திண்டுக்கல் மாவட்ட பாசனத்திற்கு வைகை அணையில் தண்ணீர் திறப்பு



ஆண்டிபட்டி: மதுரை, திண்டுக்கல் மாவட்டங்களின் முதல் போக பாசனத்திற்கு வைகை அணையில் இருந்து நேற்று தண்ணீர் திறந்து விடப்பட்டது.தென்மேற்கு பருவ மழையால் பெரியாறு அணையில் இருந்து தொடர்ந்து வைகை அணைக்கு நீர் வரத்து உள்ளது. இதனால் அணை நீர் மட்டம் படிப்படியாக உயருகிறது.நேற்று காலை வைகை அணை நீர் மட்டம் 51.57 அடியாக உயர்ந்தது. அணையின் உயரம் 71 அடி. அணைக்கான நீர் வரத்து வினாடிக்கு 815 கன அடியாகவும், அணையில் நீர் இருப்பு 2205 மில்லியன் கன அடியாகவும் இருந்தது. வைகை அணைக்கான நீர் வரத்து தொடருவதால், அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட தமிழக முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டார்.நேற்று பகல் 1.45 மணிக்கு தேனி கலெக்டர் வெங்கடாசலம், மதுரை கலெக்டர் சுப்பிரமணியம் ஆகியோர் அணையின் மதகுகளை திறந்து வைத்தனர். அணையில் இருந்து வினாடிக்கு 900 கன அடி வீதம் தண்ணீர் வெளியேறுகிறது. மதுரை, ஆண்டிபட்டிசேடபட்டி குடிநீருக்காக வினாடிக்கு ஏற்கனவே 60 கன அடிநீர் வெளியேறுகிறது. வைகை அணையில் திறக்கப்பட்டுள்ள நீரால் திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை தாலுகாவில் 1793 ஏக்கர், மதுரை மாவட்டம் வடக்கு தாலுகாவில் 29 ஆயிரத்து 501 ஏக்கர், வாடிப்பட்டி தாலுகாவில் 13747 ஏக்கர், மொத்தம் 45 ஆயிரத்து 41 ஏக்கர் பாசன வசதி பெறும். அணையில் இருந்து 120 நாட்களுக்கு தண்ணீர் திறக்கப்பட உள்ளதாகவும், குறுகிய கால பயிர்களை நடவு செய்தும் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தவும் பொதுப்பணித்துறையினர் விவசாயிகளை கேட்டுக்கொண்டுள்ளனர்.

## வெள்ளாடு வளர்க்க விவசாயிகளுக்கு பயிற்சி

காஞ்சிபுரம்: உழவர் பயிற்சி மையம் சார்பில், வெள்ளாடு வளர்ப்பது குறித்து, ஒரு நாள் இலவச பயிற்சி வழங்கப்படுகிறது.இதுகுறித்து, உழவர் பயிற்சி மைய தலைவர் வீரமணி வெளியிட்ட செய்திக்குறிப்பு:தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின், உழவர் பயிற்சி மையம், காஞ்சிபுரம் அடுத்த, ஏனாத்துாரில் இயங்கி வருகிறது. இதன் மூலம், வெள்ளாடு வளர்ப்பு குறித்து ஒரு நாள் இலவச பயிற்சி, நாளை (17ம் தேதி) ஏனாத்துாரில் உள்ள, உழவர் பயிற்சி மையத்தில் வழங்கப்பட உள்ளது. இதில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள், இன்று, 044-2726 4019 என்ற தொலைபேசி எண்ணில் அழைத்து, தங்களது பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம்.இவ்வாறு, அதில் கூறப்பட்டுள்ளது.

## விவசாயிகளுக்கு இலவச மரக்கன்று

செங்கல்பட்டு:காஞ்சிபுரம் மாவட்டத்தில், விவசாயிகளுக்கு இலவசமாக மரக்கன்றுகள் வழங்கப்படும் என, வன விரிவாக்க அலுவலர் பாஸ்கரன் தெரிவித்தார்.காஞ்சிபுரம் மாவட்ட மரம் வளர்ப்போர் சங்கம் சார்பில், செங்கல்பட்டு வன விரிவாக்க மையத்தில், மண்ணுக்கேற்ற மரம் வளர்ப்பு பற்றிய கூட்டம், நேற்று முன்தினம் நடைபெற்றது. இதற்கு சங்கத் தலைவர் மாசிலாமணி தலைமை தாங்கினார். வன விரிவாக்க அலுவலர் பாஸ்கரன் பேசியதாவது:காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மாக மரக்கன்றுகள் வழங்கப்படும். மரம் வளர்ப்பு குறித்த சந்தேகங்களுக்கு, 99766 85023 என்ற அலைபேசி எண்ணில், எப்போது வேண்டுமானாலும் விவசாயிகள் தொடர்பு கொள்ளலாம்.இவ்வாறு அவர் கூறினார்.

இந்த கூட்டத்தில், மரம் வளர்க்கும் விவசாயிகளுக்கு வங்கிகள் கடன் வழங்க, தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மரம் வளர்க்கும் விவசாயிகளுக்கு தொடர்ந்து ஐந்து ஆண்டுகளுக்கு, ஆண்டுதோறும் ஊக்கத்தொகை வழங்க வேண்டும். நாற்றங்கால் உற்பத்தியை ஆர்வமுள்ள விவசாயிகளிடம் கொடுத்து, மரக்கன்றுகளை உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## கால்நடை மருத்துவ முகாம்

விக்கிரவாண்டி:விக்கிரவாண்டி ஒன்றியம், வடகுச்சிபாளையத்தில் இலவச கால்நடை மருத்துவ முகாம் நடந்தது.விழுப்புரம் கால்நடை பராமரிப்பு துறை சார்பில் வடகுச்சிபாளையத்தில் நடந்த இலவச கால்நடை மருத்துவ முகாமிற்கு மண்டல இணை இயக்குனர் டாக்டர் தங்கராஜ் தலைமை தாங்கினார் . மாவட்ட சேர்மன் அலமேலு வேலு முன்னிலை வகித்தார். உதவி இயக்குனர் டாக்டர் குருவையா வரவேற்றார்.கலெக்டர் லட்சுமி கால்நடை மருத்துவ முகாமை துவக்கி வைத்து பேசினார். நிலவள வங்கித் தலைவர் சிந்தாமணி வேலு, கால்நடை உதவி மருத்துவர்கள் பிரபாகரமூர்த்தி, சதானந்தம், பாலாஜி, யுவராஜ், ஊராட்சி தலைவர் கமலி அய்யப்பன், துணைத் தலைவர் தென்னரசு, வெங்கடேசன் உட்பட பலர் கலந்து கொண் டனர் .வடகுச்சிபாளையம் மற்றும் சுற்றுப்புற கிராமங்களை சேர்ந்த ஆயிரத்து 100 கால்நடைகளுக்கு தடுப்பூசி, ஆண்மை நீக்கம், குடற்புழுநீக்கம் உள்ளிட்ட பல்வேறு சிகிச்சைகள் அளிக்கப்பட்டது.

## கால்நடை மருத்துவமனை துவக்கம்

செஞ்சி:மேல்அத்திப்பாக்கத்தில் வீடியோ கான்பரன்ஸ் மூலம் கால்நடை மருத்துவமனையை முதல்வர் ஜெ., திறந்து வைத்தார்.வல்லம் ஒன்றியம் மேல் அத்திப்பாக்கம் ஊராட்சியில் 21 லட்சம் ரூபாய் மதிப்பில் நபார்டு வங்கி நிதி மூலம் கால்நடை மருத்துவமனை கட்டப்பட்டுள்ளது. முதல்வர் ஜெ., நேற்று பகல் 2:00 மணிக்கு காணொளி மூலம் திறந்து வைத்தார். இதையடுத்து அ.தி. மு.க., ஒன்றிய சேர்மன் அண்ணாதுரை தலைமையில் பட்டாசு வெடித்து பொது மக்களுக்கு இனிப்பு வழங்கினர். ஒன்றிய துணை சேர்மன் பரிமளா பன்னீர் செல்வம், மாவட்ட கவுன்சிலர் மஞ்சுளா குமார், கால்நடை மருத்துவர் கனகமணி, ஊராட்சி தலைவர் நிஷாகந்தன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டுறவு சங்க தலைவர் கோபாலகிருஷ்ணன், ஊராட்சி தலைவர்கள் செந்தாமரைக்கண்ணன், துணை தலைவர் சங்திவேல், ஊராட்சி செயலாளர் வஞ்சரவேல், வார்டு உறுப்பினர்கள் பெருமாள், லட்சுமி சந்திரன், லட்சுமி ராஜேந்திரன், சரசு அரிகிருஷ்ணன், அமுதா சாந்தி, கால்நடை உதவியாளர் குப்புசாமி மற்றும் அ.தி.மு.க., நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## கம்பு விதைப்பு பணிகளை துவக்க மழையை எதிர்பார்க்கும் விவசாயிகள்

தியாகதுருகம்:மானாவரி கம்பு விதைப்பு பணிகளை துவக்க, மழையை எதிர்பார்த்து விவசாயிகள் காத்திருக்கின் றனர்.தியாகதுருகம், ரிஷிவந்தியம் பகுதியில் ஆண்டுதோறும் 10 ஆயிரம் ஏக்கர் பரப்பில், மானாவாரி நிலங் களில் கம்பு சாகுபடி செய்யப்படுகிறது. சிறு தானிய வகைகளில் ஒன்றான இது கோழி, மாட்டு தீவன உற்பத்திக்கு மூலப் பொருளாக பயன்படுகிறது. சமீப காலமாக கம்பு உணவுகளை மக்கள்

அதிகம் விரும்பி உண்பதாலும், குறிப்பாக கூழ் குடிப்பதில் பலரும் ஆர்வம் காட்டுவதால், இதற்கு நல்ல விலை கிடைக்கிறது.

விளைவித்த கம்பு தானியத்தை மார்க்கெட் கமிட்டிக்கு கொண்டு செல்லாமலேயே வீட்டிற்கே வந்து வியாபாரிகள் நல்ல விலைக்கு கொள்முதல் செய்கின்றனர். கடந்த ஆண்டு தியாகதுருகம் கமிட்டியில் 100 கிலோ எடை கொண்ட கம்பு ஒரு மூட்டை அதிகபட்சமாக ஆயிரத்து 800 ரூபாய்க்கு விற்பனையானது. மழை ஈரத்தை கொண்டு 3 மாதத்தில் விளைந்து பலன் தரக்கூடிய கம்பு சாகுபடி, இப்பகுதியில் பல விவசாயிகளுக்கு லாபத்தை கொடுத்து வருகிறது.குறிப்பாக கடந்த 3 ஆண்டுகளாக கம்பு மகசூல் அமோகமாக இருந்ததால், பயிரிட்ட பலருக்கும் கைமேல் பலன் கிடைத்தது. இவ்வாண்டும் விதைப்பு பணிகளை துவக்க, நிலத்தை உழுது தயார் நிலையில் தற்போது வைத்துள்ளனர். தென் மேற்கு பருவமழை துவங்கி, ஒன்றரை மாதங்கள் ஆகியும் இன்னும் எதிர்பார்த்த அளவு மழை இப்பகுதியில் பெய்யவில்லை. தொடர்ந்து இதே நிலை நீடித்தால், பருவம் தவறிவிடும் என்பதால் குறித்த தருணத்தில் விதைப்பு பணிகளை முடிக்க முடியுமா என்ற கவலையும் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

## 1,057 பூச்சிக்கொல்லி மாதிரிகள்ஆய்வுக்கு உட்படுத்த நடவடிக்கை

ஈரோடு:நடப்பாண்டில், 1,057 பூச்சிக்கொல்லி மாதிரிகள் சேகரித்து, சோதனைக்கு அனுப்ப உள்ளதாக, ஈரோடு மாவட்ட வேளாண் இணை இயக்குனர் விஸ்வநாதன் தெரிவித்தார்.

மேலும், அவர் கூறியதாவது: நடப்பாண்டில், ஈரோடு மாவட்டத்தில், 1,057 பூச்சிக்கொல்லி மாதிரிகளை பரிசோதிக்க, தமிழக அரசால், ஈரோடு மாவட்ட வேளாண் துறைக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதன்படி,பூச்சிக் கொல்லி மாதிரிகளின் பௌதீக, வேதியியல் குணங்களை ஆய்வு செய்யப்படும். ஆய்வின் மூலம், தரக்குறைவான மற்றும் போலியான பூச்சிக்கொல்லி மாதிரிகளை கண்டறிய முடியும்.

பூச்சிக்கொல்லி சட்டம்- 1968ன்படி, தரக்குறைவான மற்றும் போலியான பூச்சிக்கொல்லி மருந்துகளை கண்டுபிடித்து, தயாரித்தவர்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதற்காக, சட்டத்தை அமல்படுத்தும் அலுவலர்களுக்கு, ஆய்வு முடிவுகளை தெரிவிக்க வேண்டும்.இந்த பூச்சிக்கொல்லி மாதிரிகளை பரிசோதனை செய்வதன் மூலம், தரமான பூச்சிக்கொல்லி மருந்துகள், விவசாயிகளுக்கு கிடைக்க வழிவகை செய்ய முடியும்.

மேலும், 2014 மற்றும், 2015ம் ஆண்டில், 1,007 மாதிரிகள், 431 கடைகளில் பூச்சிக்கொல்லி மருந்துகள் சோதனை செய்யப்பட்டது. அதில், நம்பியூர் வட்டாரத்தில் எடுத்த மாதிரிகளில், இரண்டு மாதிரிகள் தரமற்றவை, என, கண்டுபிடிக்கப்பட்டு, உரியவர்கள் மீது நீதிமன்ற வழக்கு தொடரப்பட்டுள்ளது. நடப்பாண்டில், 1,057 மாதிரிகளை சேகரித்து பரிசோதிக்க, இலக்கு நிர்ணயித்த நிலையில், இதுவரை, 220 மாதிரிகள் சேகரித்து, பரிசோதனைக்கு அனுப்பப் பட்டுள்ளது. பரிசோதனை முடிவுகள் இன்னும் வரவில்லை. தரமற்ற பூச்சிக்கொல்லி மருந்துகள் இருந்தால், உரிய நிறுவனத்தின் மீது, கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும், என்றார்.

## மீன் வளர்ப்பில் விவசாயிகள் ஆர்வம்

பந்தலுார் :'பந்தலுார் அருகே சேரம்பாடியில் மீன் வளர்ப்பில் ஆர்வம் காட்டும் விவசாயிகளுக்கு, ஊக்குவிப்பு அளிக்க வேண்டும்' என, வலியுறுத்தப்பட்டுள்ளது.பந்தலுார் அருகே சேரம்பாடியை சேர்ந்த உள்ளூர் மக்கள், விவசாயத்தில் ஈடுபட்டு வருவதுடன், மீன் வளர்ப்பிலும்

ஆர்வம் காட்டி வருகின்றனர். தற்போது, ரோக், வால உட்பட பல்வேறு மீன்கள் இப்பகுதியில் வளர்க்கப்படுகின்றன. தற்போது, வரை, இங்கு வளர்க்கப்படும் மீன் குஞ்சுகளை, கேரள மாநிலம் நிலம்பூரில் வாங்கப்படுகிறது. இந்த தொழிலை மேம்படுத்த, நீலகிரி மாவட்ட கலெக்டர் சங்கருக்கு சுதாகரன் என்பவர், அனுப்பிய மனு:மீன் தொழிலை மேம்படுத்த, ஊட்டியில் உள்ள மீன்வளத்துறை அலுவலகத்தை அணுகிய போது, எவ்வித உதவியும் கிடைக்கவில்லை; அதனால், ஒவ்வொரு முறையும் கேரளாவுக்கு சென்று மீன் குஞ்சுகளை வாங்கி வருகிறேன். எனது தொழிலை மேம்படுத்த அதிகாரிகள் போதிய உதவி அளிக்க, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு சுதாகரன் கூறியுள்ளார்.

### மீன்பிடி இறங்கு தளம் அடிக்கல் நாட்டு விழா

ராமநாதபுரம்:ராமநாதபுரம் மாவட்டத்தில் நவீன வசதிகளுடன் ரூ.60 லட்சத்தில் சூரை மீன்பிடி படகுகள் வடிவமைக்க, 50 சதவீத மானியம் வழங்கும் திட்டம் நேற்று துவங்கப்பட்டது. தனுஷ்கோடி, முகுந்தராயர்சத்திரம், தங்கச்சிமடம், பாம்பன், டி.மாரியூர், வேதாளை ஆகிய இடங்களில் ரூ.44.70 கோடி மதிப்பில் மீன்பிடி இறங்கு தளங்கள், ரூ.1.40 கோடி மதிப்பில் ஒருங்கிணைந்த மீன்துறை அலுவலக கட்டடங்கள் கட்ட முதல்வர் ஜெயலலிதா வீடியோ கான்பரசிங் மூலம் நேற்று அடிக்கல் நாட்டினார்.

நிகழ்ச்சியில் கலெக்டர் நந்தக்குமார், மீன்வளத்துறை மண்டல துணை இயக்குனர் காசிநாத பாண்டியன், உதவி இயக்குனர் கோபி, உதவி செயற் பொறியாளர் தர்மராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## பட்டுப்புழு வளர்ப்பு, அடை தயாரிப்பு லேப் டாப் பழுது நீக்க பயிற்சி வகுப்பு

கீழக்கரை:திருப்புல்லாணி ஒன்றியத்தில் உ<ள்ள கிராமங்களைச் சேர்ந்தவர்களுக்கு, பட்டுப்புழு வளர்ப்பு, அடை தயாரிப்பு, லேப் டாப் பழுது நீக்குதல் உள்ளிட்ட பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளது.

இதுகுறித்து திருப்புல்லாணி ஒன்றிய கிராம ஊராட்சி பி.டி.ஓ., அப்துல் ஜபார் கூறியதாவது:

தேசிய வேலை வாய்ப்பு உறுதித்திட்டத்தின் கீழ் சுயவேலை வாய்ப்பு திறன் பயிற்சி வகுப்புகள் நடக்க உள்ளது. இதற்கான நேர்காணல் வரும் ஜூலை 16 ல் திருப்புல்லாணி ஒன்றிய அலுவலகத்தில் நடக்கிறது.பெண்ணை தலைவராக கொண்ட குடும்ப உறுப்பினர்களுக்கு 18 - 45 வயதுக்குள்ளும், ஆண்களை தலைவராக கொண்ட குடும்ப உறுப்பினர்களுக்கு 18 - 35 வயதுக்குள்ளும் அவர்களின் கல்வித்தகுதிக்கேற்ப ஆடு, கோழி, பட்டுப்புழு வளர்ப்பு, லேப்டாப் பழுதுபார்த்தல், அழகுக்கலை, ஆடை தயாரிப்பு உட்பட 41 வகையான பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன. இதில் 33 கிராம ஊராட்சிகளில் வசிப்போர் பங்கேற்று பயன் பெறலாம், என்றார்.

## சேவல் குஞ்சுகள் விற்பனை ஜோர்

பரமக்குடி: கடலூரில் இருந்து சேவல் குஞ்சுகளை கொண்டு வந்து பரமக்குடி பகுதியை அடுத்துள்ள காட்டுப்பரமக்குடி, மணிநகர், ஓட்டைப்பாலம் பகுதிகளில் சிலர் விற்பனை செய்து வருகின்றனர். இந்த குஞ்சுகள் வர்ணங்கள் பூசாமல் இயற்கையான நிறங்களிலேயே உள்ளன.

வியாபாரிகள் கூறுகையில்,""நாங்கள் ஒவ்வொருவரும் நூற்றுக்கணக்கான கோழி மற்றும் சேவல் குஞ்சுகளை கொண்டு வந்து 8 குஞ்சுகளை ரூ.100க்கு விற்கிறோம்," என்றனர்.

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மண் இல்லாமல் பசுந்தீவன உற்பத்தி**

மண் இல்லாமல் பயிர் வளருமா என்று நம்மில் பலரும் கேள்வி எழுப்புவர். ஆனால் மண் இல்லாமல் பயிர் வளரும் என்பதை அண்மைக்கால அறிவியல் நிரூபித்து வருகிறது. தற்போதுள்ள சூழ்நிலையில் மக்கள் தொகைப் பெருக்கம், பெருகி வரும் தொழிற்சாலைகள் ஆகியவற்றால் இன்று விளை நிலத்தின் பரப்பளவு குறைந்து கொண்டே வருகிறது. இது மட்டுமின்றி மழை அளவு குறைந்து வருவது, வேளாண் இடுபொருள்களின் விலையேற்றம், கூலிக்கு ஆள்கள் கிடைக்காதது, அதிக கூலி ஆகிய காரணங்களால் இன்றைய சூழ்நிலையில் விவசாயிகளும், கால்நடை வளர்ப்போரும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் கால்நடைகளுக்கு சத்தான பசுந்தீவனம் கிடைப்பதில்லை.

இதுகுறித்து காட்டுப்பாக்கம் வேளாண்மை அறிவியல் உதவிப் பேராசிரியர் (உழவியல்) பெ. முருகன் கூறியது: மண் இல்லாமல் பசுந்தீவனம் உற்பத்தி முறை விவசாயிகளுக்கும், கால்நடை வளர்ப்போருக்கும் நல்ல திருப்பத்தை ஏற்படுத்தும். இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் பசுந்தீவனங்களுக்கு ஹைட்ரோபோனிக் பசுந்தீவனம் என

அழைக்கப்படுகிறது. இந்த முறையில் 7 முதல் 10 நாள்களில் பசுந்தீவனம் உற்பத்தி செய்ய முடியும். மேலும் குறைந்த எண்ணிக்கையிலான வேலையாள்கள், குறைந்த நீரில் ஆண்டு முழுவதும் பசுந்தீவனத்தை தடையின்றி உற்பத்தி செய்யமுடியும்.

இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் பசுந்தீவனமானது, ஆண்டு முழுவதும் ஒரே மாதிரியான சீரான தரம், சுவை, சத்துக்கள் நிறைந்து காணப்படும். கல், மண், தூசி, பூச்சி மருந்துகள் ஆகியவை இல்லாமல் இருக்கும். 300 சதுர அடி பரப்பளவில் 800 முதல் 1000 கிலோ பசுந்தீவனம் உற்பத்தி செய்ய முடியும்.

பயன்படுத்தும் விதைகள்: நன்றாகக் காய்ந்த மக்காச்சோளம், சோளம், கம்பு, கோதுமை, பார்லி, ஓட்ஸ், கேழ்வரகு, காராமணி ஆகிய பயிர் விதைகளாக இருக்க வேண்டும். நன்றாக முளைப்புத் திறன் உள்ள விதைகளாகவும் இருக்க வேண்டும்.

உற்பத்தி முறை: 20-க்கு 15 அடி அளவுள்ள எளிமையான பசுமையான நிழல் வலை குடில் (பசுமைக்குடில்) அமைத்துக் கொள்ளலாம். இந்த குடிலில் மரம், இரும்பு தகடால் ஆன சாரம் வைத்து ரேக் அமைத்துக் கொள்ள வேண்டும். நிழல்வலை குடிலின் வெப்பநிலை 24 முதல் 27 டிகிரி செல்சியல், ஈரப்பதம் 80 முதல் 90 சதவீதம் இருக்குமாறு அமைத்துக் கொள்ள வேண்டும். முளை கட்டிய விதைகளை பிளாஸ்டிக் தட்டுகளில் பரப்பி, ரேக்கில் அடுக்கி வைத்து விடலாம். தினமும் ஐந்தாறு முறை பூவாளி கொண்டோ அல்லது சிறிய நுண் நீர் தெளிப்பான் கொண்டோ, நீர் தெளிக்க வேண்டும்.

8 நாள்களில் 15 முதல் 20 செ.மீ. அளவுக்கு பசுந்தீவனம் வளர்ந்து விடும். இந்த பசுந்தீவன புற்களை வேரோடு எடுத்து கால்நடைகளுக்கு கொடுக்கலாம். 300 சதுர அடிப் பரப்பளவில், 500 முதல் 600 கிலோ பசுந்தீவனம் தினமும் உற்பத்தி செய்யலாம். ஒரு கிலோ

மக்காச்சோளத்துக்கு 6 முதல் 7 கிலோ பசுந்தீவனம் உற்பத்தி செய்யலாம். பயன்கள்: ஒரு கிலோ பசுந்தீவனம் உற்பத்தி செய்ய 1 முதல் 2 லிட்டர் நீர் போதுமானது. இதே அளவு பசுந்தீவனத்தை நிலத்தில் பயிரிட்டால் 60 முதல் 70 லிட்டர் நீர் தேவைப்படும். குறைந்த காலத்தில் அதாவது 7 முதல் 8 நாள்களில் அறுவடை செய்து விடலாம். கடும் வறட்சி காலங்களிலும் எளிமையாக பசுந்தீவனத்தை உற்பத்தி செய்ய முடியும். ஹைட்ரோபோனிக் பசுந்தீவனத்தில் அதிக புரதச் சத்துக்கள் உள்ளன. மிகவும் சுவையாக இருப்பதால், கால்நடைகளுக்கு கொடுக்கும் அடர்தீவனத்தின் அளவைக் குறைத்துக் கொள்ளலாம். இதன் மூலம் கறவை மாடுகள் 8 சதவீதம் முதல் 10 சதவீதம் பால் உற்பத்தியை அதிகரிக்க முடியும். பாலின் தரமும் உயர்ந்து காணப்படும். ஹைட்ரோபோனிக் பசுந்தீவனத்தில் உள்ள சத்துக்களின் அளவு: ஈரப்பதம் - 80 முதல் 85 சதவீதம், புரதச் சத்து - 13 முதல் 14 சதவீதம், நார்ச்சத்து - 7 முதல் 9 சதவீதம், கொழுப்புச்சத்து - 3 முதல் 4 சதவீதம், நைட்ரஜன் அல்லாத சத்துக்கள் - 70 முதல் 75 சதவீதம், கால்சியம் - 0.3 முதல் 0.4 சதவீதம், பாஸ்பரஸ் - 0.3 முதல் 0.4 சதவீதம், செரிமான தன்மை 80 சதவீதம். எனவே அதிக அளவில் கால்நடைகளை வளர்க்கும் விவசாயிகள், குறைந்த மழை அளவு, வறட்சியான காலங்களில் மட்டுமின்றி ஆண்டு முழுவதும் பசுந்தீவனம் கிடைக்க ஹைட்ரோபோனிக் பசுந்தீவனத்தை வளர்த்து கால்நடைகளுக்கு சத்தான பசுந்தீவனத்தை கொடுத்த பண்ணை வருமானத்தை, பெருக்கி, பசுந்தீவனப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யலாம். மேலும் விவரங்களுக்கு காட்டுப்பாக்கம் வேளாண்மை அறிவியல் நிலையத்தை 044 - 2745 2371 என்ற தொலைபேசி எண்ணிலோ, 98844 02613 என்ற செல்லிடப்பேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு பயனடையலாம் என்றார் உதவி பேராசிரியர் பெ. முருகன்.

**மருந்து கூர்க்கன் - மகத்தான லாபம்!**

மூலிகை பயிரை வளர்த்தால் அதிக லாபம் ஈட்டலாம். குறுகிய கால மருந்துப் பயிர்களில் மருந்து கூர்க்கன் அல்லது கூர்க்கன் கிழங்கு (கோலியஸ்) பயிரிடப்பட்டு வருகிறது. சேலம் மாவட்டத்தில் அதிகம் பயிரிடப்பட்ட இவற்றை, வேலூர் மாவட்ட விவசாயிகளும் பயிரிட்டு வருகின்றனர்.

பயிரின் சிறப்பு, பயிரிடுவது எப்படி?

இந்த மருந்து கூர்க்கனின் வேர்க்கிழங்குகள் மருந்து பொருள்களில் அதிகம் பயன்படுகின்றன. வேர்கள் கேரட்டை போல் பருமனாகவும், 30 செ.மீ. வரை நீளமாகவும் இருக்கும். வேர்கள் இளம் மஞ்சள் நிறத்துடனும், வாசனைத் தன்மையுடனும் இருக்கும். இவற்றில் ரத்த அழுத்தத்தைக் குறைக்கப் பயன்படும் போர்ஸ்கோலின் எனும் மூலப்பொருள் உள்ளது. இது கிளாகோமா எனும் கண்கோளாறு நோய்க்கும் மருந்தாக பயன்படுகிறது.

மருந்து கூர்க்கனில் மங்கானிபெரு, கார்மாய் எனும் இரு ரகங்கள் இருக்கின்றன. மங்கானிபெரு கர்நாடக மாநிலம் பெல்காம் பகுதிகளில் அதிகம் பயிரிடப்படுகிறது. இதன் கிழங்குகள் பருமனாகவும், 30 செ.மீ வரை நீளமாகவும் இருக்கும். சேலம் மாவட்டத்தில் பயிரிடப்படுவதும் மங்காணிபெரு ரகம் தான்.

மருந்து கூர்க்கனை செம்மண் அல்லது மணல் செம்மண் அல்லது சரளை வகை மண் உள்ள இடங்களில் சாகுபடி செய்யலாம். வேரின் வளர்ச்சிக்கு மண்ணின் தன்மை கடினமாக இருக்கக் கூடாது. வடிகால் வசதி உடைய மணற்பாங்கான மண் வகைகள் மிகவும் ஏற்றவை.

நீர்த் தேங்கும் மண் வகைகள் இதன் சாகுபடிக்கு ஏற்றதல்ல. ஒரளவு மழையளவு ஆண்டு முழுவதும் 70 செ.மீ. உள்ள சமவெளிப் பகுதிகள்

மருந்து கூர்க்கன் சாகுபடிக்கு ஏற்றவை. தாழ்வான மலைச்சரிவுகளிலும் நன்றாக வளரும். தமிழ்நாட்டில் நீர்ப்பாசன வசதியுடன் இதை சாகுபடி செய்யலாம். நுனித்தண்டுகள் மூலம் கிழங்குகளை பயிர்பெருக்கம் செய்யலாம். மூன்று அல்லது நான்கு கணுக்களை உடைய 10 செ.மீ. நீளமுள்ள நுனிதண்டங்களை மட்டுமே நடவுக்கு பயன்படுத்த வேண்டும். நிலத்தை உழுது ஹெக்டேருக்கு 15 டன் தொழுஎரு இட்டு மண்ணை பயன்படுத்த வேண்டும். பிறகு 60 செ.மீ. இடைவெளியில் பார்களைப் பிடிக்க வேண்டும். பயிர்களின் பக்கவாட்டில் தண்டுகளை ஜூன்-ஜூலை அல்லது செப்டம்பர் -அக்டோபர் நடவு செய்ய வேண்டும். 60 செ.மீ. இடைவெளியில் அமைக்கப்பட்ட பார்களில் 45 செ.மீ. இடைவெளியில் நாற்றுகளை நடவு செய்ய வேண்டும். ஒரு ஹெக்டேரில் நடவு செய்ய 37,030 செடிகள் தேவைப்படும். சற்றே வளம் குறைந்த நிலங்களில் செடிகளை 30 செ.மீ. இடைவெளியில் நடவு செய்யலாம். இந்த முறையில் ஹெக்டேருக்கு 55,000 செடிகள் நடுவதற்கு தேவைப்படும். ஒரு ஹெக்டேருக்கு 30 கிலோ தழைச்சத்து, 60 கிலோ மணிச்சத்து, 50 கிலோ சாம்பல் சத்து உரங்கள் ஆகியவற்றை செடிகள் நட்ட 30 ஆவது நாளிலும் பிறகு 45-ஆவது நாளிலும் சமமாகப் பிரித்து இட வேண்டும். நுண்ணூட்டச் சத்து பற்றாக்குறையாக உள்ள நிலங்களுக்கு ஹெக்டேருக்கு 10 கிலோ துத்தநாக சல்பேட் நுண்ணூட்டச் சத்து உரத்தை அடியுரமாக இடுவது அவசியம். செடிகளை நட்ட முதல் மாதத்தில் வாரம் ஒரு முறையும், பிறகு பத்து நாள்கள் இடைவெளியிலும் நீர்ப் பாசனம் செய்ய வேண்டும். கிழங்குகளை அறுவடை செய்வதற்கு 10 நாள்கள் இருக்கும் போது, கடைசி பாசனத்தை நிறுத்தி விடவேண்டும். செடிகளை நட்ட ஆறு முதல் ஏழு மாதங்களில் கிழங்குகள் அறுவடைக்கு

தயாராகின்றன. இந்தத் தருணத்தில் செடிகளை தாழ் அறுத்து மண்ணில் போதிய அளவு ஈரம் இருக்குமாறு மண்ணைத் தோண்டி, கிழங்குகளைத் சேதமின்றி எடுக்க வேண்டும். இதற்கு உழவு கலப்பையைக் கொண்டு மேலாக உழுது கிழங்குகளைச் சேதமின்றி எடுக்க வேண்டும். ஒரு ஹெக்டேருக்கு 15-20 டன் பச்சை வேர்கள் அல்லது 2000-2200 கிலோ உலர்ந்த வேர்கள் மகசூலாக கிடைக்கும்.

பச்சை கிழங்குகளை நீளவாக்காகவும், குறுக்காகவும் சிறிய துண்டுகளாக கத்தி கொண்டு வெட்டி பிறகு வெயிலில் சீராக உலர்த்த வேண்டும்.

2011-ஆம் ஆண்டு முதலே நெமிலி ஒன்றியத்தில் உள்ள பெரப்பேரி கிராமத்தைச் சேர்ந்த விவசாயி பழனி மருந்து கூர்க்கனை பயிரிட்டுவருகிறார்.

இதுகுறித்து பழனியிடம் கேட்டபோது, அவர் கூறியதாவது:

மூன்றரை ஏக்கரில் பயிரிடுவதைத் தொடங்கினேன். தற்போது ஏக்கருக்கு 10 டன் மகசூல் கிடைக்கிறது. டன்னுக்கு ரூ12 ஆயிரம் விலை கிடைக்கிறது. கிழங்குகள், உரங்களை கிழங்குகளை, அவற்றைப் பெற்றுக் கொள்ளும் நிறுவனத்தாரே அளிக்கின்றனர் என்றார்.

**கோவையில் வேளாண் வணிகக் கண்காட்சி**

கோவை மாவட்ட சிறு தொழில் உரிமையாளர் சங்கம் (கொடிசியா) சார்பில் கோவையில் ஜூலை 17 முதல் 20-ஆம் தேதி வரை வேளாண் வணிக கண்காட்சி (அக்ரி இன்டெக்ஸ் 2015) நடைபெறுகிறது.

இதுகுறித்து கொடிசியா தலைவர் இ.கே.பொன்னுசாமி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணை வேந்தர் டாக்டர் கே.ராமசாமி ஆகியோர் கோவையில் செய்தியாளர்களிடம் செவ்வாய்க்கிழமை கூறியது:

15-வது வேளாண் கண்காட்சியை ஜூலை 17 முதல் 20-ம் தேதி வரை

கொடிசியா, நடத்துகிறது. இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில், உணவு பதப்படுத்துதல் தொழில்துறை அமைச்சகம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம், வேளாண் இயந்திர உற்பத்தியாளர் சங்கம், பால் பண்ணை விவசாயிகள் சங்கம் உள்ளிட்ட ஏராளமான மத்திய, மாநில அரசு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் பங்கேற்கின்றன. இதில் தமிழ்நாடு, கேரளம், குஜராத், ஹரியாணா, பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்கள் மட்டுமின்றி, இத்தாலி, இஸ்ரேல், ஜப்பான், பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்களும் பங்கேற்கின்றன. பல்வேறு தலைப்புகளில் கருத்தரங்குகள் நடைபெறுகின்றன. விவசாயம் சார்ந்த தொழில்களில் ஈடுபட்டுள்ள சுமார் 300 நிறுவனங்கள் தங்களது அரங்குகளை கண்காட்சியில் அமைக்க உள்ளன. இந்தக் கண்காட்சியில் சுமார் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்ப்பதாக அவர்கள் தெரிவித்தனர். கண்காட்சியின் தலைவர் ஆர்.சசிகுமார், கொடிசியா செயலர் வி.திருஞானம் உள்ளிட்ட நிர்வாகிகள் உடனிருந்தனர்.

**ஆடி முன்பட்ட பயிற்சி முகாம்**

சோரப்பட்டில் தோட்டக்கலை பயிர்களுக்கான ஆடி முன்பட்ட பயிற்சி முகாம் புதன்கிழமை நடைபெற்றது.

புதுச்சேரி அரசின் தோட்டக்கலைத்துறை மூலம் செயல்படுத்தப்படும் தேசிய தோட்டக்கலை இயக்கம் சார்பில் தோட்டக்கலை பயிர்களுக்கான ஆடி பருவத்திற்கான முன்பட்ட பயிற்சி முகாம் நடைபெற்றது.

துணை வேளாண் இயக்குநர் சிவபெருமான் முகாமைத் தொடங்கி வைத்தார். இதில் பாதுகாக்கப்பட்ட காய்கறி சாகுபடி எனும் தலைப்பில் விளக்கம் அளிக்கப்பட்டது. சோரப்பட்டு, விநாயகம்பட்டு, செல்லிப்பட்டு

மற்றும் வம்புபட்டு கிராமங்களைச் சேர்ந்த காய்கறி சாகுபடி விவசாயிகள் 60-க்கும் மேற்பட்டோர் பங்கேற்று பயன் அடைந்தனர்.

**கறவைப் பசு வழங்குவதற்கான கூட்டம்**

கடலூர் மாவட்டத்தில் கறவை பசு, வெள்ளாடு வழங்குவதற்கான குழுக்கூட்டம் ஆட்சியர் தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கடலூர் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பாக 2015-16ஆம் ஆண்டு விலையில்லா ஆடுகள், கறவை பசுக்கள் வழங்கும் திட்டத்தில் பயனாளிகள் தேர்வு, திட்டங்கள் செயல்படுத்துவது தொடர்பான குழுக்கூட்டம் 2-வது நாளாக மாவட்ட ஆட்சியரகத்தில் ஆட்சியர் எஸ்.சுரேஷ்குமார் தலைமையில் நடைபெற்றது. பஞ்சாயத்து தலைவர்கள் பங்கேற்ற இக்கூட்டத்தில் அவர்களின் கருத்துகளை கேட்ட பின்னர் ஆட்சியர் கூறியதாவது:

கடலூர் மாவட்டத்தில் வரும் அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய 3 மாதங்களில் 10 கிராமங்களில் 500 பேருக்கு 500 கறவை பசுக்களும், 88 கிராமங்களில் 4,031 பயனாளிகளுக்கு ஆடுகளும் வழங்கப்படவுள்ளன.

இத்திட்டத்தில் முக்கியப் பயனாளி மகளிராக இருக்க வேண்டும். அரவாணிகள், குடும்பப் பொறுப்பை கவனித்து வரும் பெண், விதவை, ஆதரவற்றோர், ஊனமுற்றோர் ஆகியோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றார்.

முதல் நாள் நடந்த கூட்டத்தில் 3 ஆயிரம் பேருக்கு கறவைப் பசு, வெள்ளாடு வழங்க முடி எடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

கூட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் சி.எஸ்.ராஜாசிதம்பரம் மற்றும் ஊராட்சிமன்றத் தலைவர்கள், துணைத் தலைவாகள், சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

**அதிக மகசூலுக்கு வேம்பு பூசிய யூரியா**

விவசாயிகள் அதிக மகசூல் பெற வேம்பு பூசிய யூரியா பயன்படுத்த வேளாண்மைத் துறை சார்பில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

தானிய உற்பத்தியைப் பெருக்கி தன்னிறைவு அடைய மத்திய, மாநில அரசுகள் வேளாண்மைத் துறையில் பல்வேறு சீரியத் திட்டங்களை வகுத்து வருகிறது. அதன்படி, விவசாயிகள் அதிக அளவில் பயன்படுத்தும் ரசாயன உரமான யூரியாவை கட்டுப்பாட்டு விலையில் தொடர்ந்து வழங்கி வருகிறது. தேவைக்கு அதிகமான உரங்கள் இடப்படுவதால் அவைகள் காற்று, நீர் உள்ளிட்ட பல்வேறு வழிகளில் ஆவியாகி விரயமாவதுடன் பூச்சிநோய் தாக்குதல் ஏற்படுவதும், சுற்றுச்சூழல் மாசு அடைவதும் ஏற்படுகிறது. இவை அறிவியல் பூர்வமாக ஆராய்ச்சிகள் மூலமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

நெல் பயிருக்கு யூரியாவை அதிகப்படியாக பயன்படுத்தும்பொழுது பூச்சி நோய்கள் தாக்கி பயிர் விளைச்சல் குறைவதோடு, அதிகப்படியான உரச்சத்துகள் வீணாக காற்றிலும், நீரிலும், மண்ணிலும் வீணாகிறது. அதன் மூலம் பண விரயம் ஏற்படுகிறது.

யூரியா உரம் விரயமாவதைத் தடுக்க 5 பங்கு யூரியாவுடன், ஒரு பங்கு வேப்பம் புண்ணாக்கு கலந்து பயன்படுத்த வேண்டும். இது எளிய முறை என்றாலும் விவசாயிகள் பல்வேறு நடைமுறை காரணங்களால் கடைபிடிப்பதில்லை.

இதனைக் கருத்தில் கொண்டு உர நிறுவனங்கள் தங்களின் யூரியா தயாரிப்பில் 70 சதவீதத்தை வேம்பு பூசப்பட்ட யூரியாவாக விற்பனைக்கு வழங்க உத்தரவிட்டுள்ளது.

இவ்வாறு வேம்பு பூசப்பட்ட யூரியா உரங்களை பயன்படுத்தும் பொழுது உரப்பயன்பாடு திறன் அதிகரிக்கிறது, சத்துகள் வீணாவது தடுக்கப்படுகிறது.

மேலும், உற்பத்தி செலவினை குறைக்கவும் வழிவகை செய்கிறது. எனவே விவசாயிகள் வேம்பு பூசிய யூரியா உரங்களை மட்டுமே பயன்படுத்தி அதிக மகசூல் பெற்று மண் வளத்தை பாதுகாத்து பயனடைய வேண்டுமென கடலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் (பொ) க.இளங்கோ தெரிவித்துள்ளார்.

**ஜூலை 24-இல்விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வருகிற 24-ஆம் தேதி நடைபெற உள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் வே.க.சண்முகம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்டரங்கில் மாவட்ட ஆட்சியர் வே.க.சண்முகம் தலைமையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வருகிற 24-ஆம் தேதி நடைபெற உள்ளது. இந்தக் கூட்டத்தில், தங்களது குறைகள், கோரிக்கைகளை நேரடியாகவும், மனுவாகவும் விவசாயிகள் தெரிவிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**கால்நடை மருந்தகங்கள் திறப்பு**

மதுராந்தகம் உள்கோட்டத்தில் சோத்துப்பாக்கம், கருங்குழி ஆகிய இடங்களில் புதிதாகக் கட்டப்பட்ட கால்நடை மருந்தகங்கள் புதன்கிழமை திறக்கப்பட்டன.

சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்தபடியே முதல்வர் ஜெயலலிதா காணொலிக் காட்சி முறையில் இந்த மருந்தகங்களை திறந்து வைத்தார்.

சோத்துப்பாக்கம்: சோத்துப்பாக்கம் கால்நடை மருந்தகக் கட்டடம் நபார்டு வங்கி மூலம் ரூ.21 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டது. இதன் திறப்பு

விழாவையொட்டி, செய்யூர் எம்.எல்.ஏ. ராஜீ கலந்து கொண்டு சிறப்பு பூஜை செய்து, அனைவருக்கு இனிப்புகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில், மேல்மருவத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் ஏழுமலை, துணைத் தலைவர் வேணுகோபால், ஊராட்சிச் செயலர் செந்தில்குமார், கால்நடைத் துறை முன்னாள் உதவி இயக்குநர் மருத்துவர் அம்பேத்கார், உதவி இயக்குநர் பால்ராஜ், கால்நடை உதவி மருத்துவர்கள் விஜயகுமார், நதியா, ஆய்வாளர்கள் தங்கமணி, சேகர், ராமதாஸ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கருங்குழி பேரூராட்சி: கருங்குழி பேரூராட்சியில் புதிதாக கால்நடை மருந்தகக் கட்டடம் ரூ.11 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டது. இதன் திறப்பு விழாவையொட்டி, கருங்குழி பேரூராட்சித் தலைவர் மஞ்சுளா புருஷோத்தமன் சிறப்பு பூஜை செய்து அனைவருக்கும் இனிப்புகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில், கால்நடை உதவி மருத்துவர் மதியழகன், பேரூராட்சித் துணைத் தலைவர் பழனி, உறுப்பினர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**மீன்பிடி படகுகள் கட்ட ரூ. 30 லட்சம் மானியம் வழங்கும் திட்டம்: காணொலிக் காட்சி மூலம் முதல்வர் தொடக்கி வைத்தார்**

ஆழ்கடலில் மீன்பிடிக்கும் வகையில், நவீன் வசதிகளுடன் கூடிய மீன்பிடி படகுகள் கட்ட ரூ. 30 லட்சம் மானியம் வழங்கும் திட்டத்தை, தமிழக முதல்வர் ஜெயலலிதா சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து புதன்கிழமை காணொலிக் காட்சி மூலம் தொடக்கி வைத்தார்.

நவீன வசதிகளுடன் கூடிய இந்தப் படகுகளைக் கட்டுவதற்கு ரூ. 60 லட்சம் செலவாகும். இதில், 50 சதவீதமான ரூ. 30 லட்சத்தை மானியமாக வழங்கும் திட்டத்தை தமிழக அரசு தொடக்கி வைத்துள்ளது.

இத்திட்டத்தை, முதல்வர் ஜெயலலிதா சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி மூலம் தொடக்கி வைத்தார். முன்னதாக, மீன்வளத் துறைச் செயலர் க. விஜயகுமார் வரவேற்றார்.

திட்டத்தை முதல்வர் தொடக்கி வைத்த பின்னர், ராமநாதபுரம் மாவட்டப் பிரதான மீனவக் கடற்கரை கிராமங்களான தனுஷ்கோடி, முகுந்தராயர் சத்திரம், தங்கச்சிமடம், பாம்பன், டி.மாரியூர் மற்றும் வேதாளை ஆகிய 6 இடங்களில் மொத்தம் ரூ. 44.70 கோடி மதிப்பில் அமைக்கப்பட உள்ள மீன்பிடி இறங்கு தளங்களுக்கான அடிக்கல்லையும் நாட்டினார்.

மேலும், ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்துக்குள்ளேயே மீன்வளத் துறை துணை இயக்குநர் அலுவலகம், உதவி இயக்குநர் அலுவலகங்கள், மீன்பிடி துறைமுகத் திட்ட உதவிச் செயற்பொறியாளர் அலுவலகம் உள்ளிட்ட 4 அலுவலகங்களுக்கும் ரூ. 1.80 கோடி மதிப்பில் கட்டப்படவுள்ள புதிய கட்டடங்களுக்கான அடிக்கல்லையும் நாட்டினார்.

இதையடுத்து, ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் க. நந்தகுமார், இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் ஒரு படகுக்கு ரூ. 30 லட்சம் மானியம் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியமைக்காக, மீனவக் குடும்பங்களின் சார்பாக நன்றி தெரிவித்தார்.

இதில், மீனவர் சங்கப் பிரதிநிதிகள் தேவதாஸ், எமரிட், ஜேசுதாஸ், இருதயமேரி, எம்.எஸ். அருள் ஆகியோரும் கலந்துகொண்டு, தமிழக முதல்வருக்கு காணொலிக் காட்சி மூலம் நன்றி தெரிவித்தனர்.

நிகழ்ச்சியில், மீன்வளத் துறை துணை இயக்குநர் காசிநாத பாண்டியன், உதவி இயக்குநர் கோபிநாத், உதவிச் செயற்பொறியாளர் தர்மராஜ், பொதுப்பணித் துறை உதவிச் செயற்பொறியாளர் குருதிவேல் மாறன் உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் பங்கேற்றனர்.

**பாசனத்திற்காக அமராவதி அணை திறப்பு**

அமராவதி அணையில் இருந்து பழைய, புதிய ஆயக்கட்டு பாசனப் பகுதிகள் பயன் பெரும் வகையில் புதன்கிழமை தண்ணீர் திறக்கப்பட்டது. இதன் மூலமாக 47,117 ஏக்கர் நிலங்கள் பயனடையும்.

அமராவதி அணையின் மூலமாக திருப்பூர், ஈரோடு, கரூர் மாவட்டங்களில் உள்ள சுமார் 55,000 ஏக்கர் பழைய, புதிய ஆயக்கட்டு நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. மேலும், நூற்றுக்கணக்கான கிராமங்களும் குடிநீர் வசதி பெற்று வருகின்றன.

நிகழாண்டு தொடக்கத்தில் பழைய, புதிய ஆயக்கட்டுப் பகுதிகளுக்கு பாசனத்திற்காகவும், குடிநீர் தேவைகளுக்காகவும் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது. மார்ச் மாதத்தில் அணையின் நீர் மட்டம் அதல பாதாளத்திற்கு சென்றது.

இந்நிலையில், அணையின் நீர் பிடிப்புப் பகுதிகளில் கோடை மழை தொடர்ந்து பெய்ததால் அணையின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்தது. இந்நிலையில் பருவ மழை தொடங்கியதன் எதிரொலியாக அமராவதி அணையின் நீர்பிடிப்புப் பகுதிகளான சின்னாறு, தேனாறு, பாம்பாறு பகுதிகளிலும் கனமழை பெய்தது. இதனால் அணையின் நீர்மட்டம் 80 அடியை எட்டியது.

இந்நிலையில் அமராவதி அணையில் இருந்து பழைய, புதிய ஆயக்கட்டுப் பகுதிகளுக்கு தண்ணீர் திறந்து விட முதல்வர் ஜெயலலிதா செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டிருந்தார். அதன்படி புதன்கிழமை மதியம் 1.30 மணி அளவில் அணையில் இருந்து பாசனத்துக்குத் தண்ணீர் திறக்கப்பட்டது. ஆட்சியர் கு.கோவிந்தராஜ், எம்எல்ஏ சி.சண்முகவேலு, மக்களவை உறுப்பினர் சி.மகேந்திரன், எம்எல்ஏ என்எஸ்என்.நடராஜன் மற்றும் பொதுப்பணித் துறை அதிகாரிகள், அதிமுக பிரமுகர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இது தொடர்பாக பொதுப்பணித் துறை அதிகாரிகள் செய்தியாளர்களிடம் கூறியது:

பழைய ஆயக்கட்டுப் பாசனப் பகுதிகளுக்கு அமராவதி ஆற்றின் மூலமாக 2,000 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இது, 10 நாள்களுக்கு மொத்தம் 1,173 மில்லியன் கன அடி தண்ணீர் திறந்து விடப்படும். புதிய ஆயக்கட்டுப் பகுதிகளுக்கு 440 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இது, 15 நாள்களுக்கு மொத்தம் 570 கன அடி தண்ணீர் திறந்து விடப்படும்.

இதனால் மொத்தமாக புதிய, பழைய ஆயக்கட்டுப் பாசனப் பகுதிகளில் 47,117 ஏக்கர் நிலங்கள் பயன் பெறும் என்றனர்.

அணையின் நிலவரம்: 90 அடி உயரமுள்ள அணையில் புதன்கிழமை காலை 7 மணி நிலவரப்படி 78.38 அடி நீர் இருப்பு காணப்பட்டது. 4,035 மில்லியன் கன அடி கொள்ளவு கொண்ட அணையில் 3043.17 மில்லியன் கன அடி நீர் இருப்பு இருந்தது. அணைக்கு உள் வரத்தாக 164 கன அடி வந்து கொண்டிருந்தது.

**வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தில் ரூ. 89 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்**

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ. 89 லட்சத்துக்கு கொப்பரை ஏலம் புதன்கிழமை நடைபெற்றது. பெருந்துறை மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதி விவசாயிகள் 2,848 மூட்டைகளில் 1,43,000 கிலோ கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், முதல் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ. 63.30-க்கும், அதிகபட்சமாக ரூ. 66-க்கும் விற்பனையானது. இரண்டாம் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ. 35.15-க்கும், அதிகபட்சமாக ரூ. 62.15-க்கும் விற்பனையானது.

மொத்தம் ரூ. 89 லட்சத்துக்கு ஏலம் மூலமாக விற்பனையானது என சங்கத் தலைவர் அருள்ஜோதி கே.செல்வராஜ் தெரிவித்தார்.

**1000 ஏக்கரில் நெற்பயிர் சேதம்: இழப்பீடு வழங்க விவசாயிகள் கோரிக்கை**

அரக்கோணம் வட்டத்தில் வறட்சியால் தண்ணீர் இன்றி அறுவடைக்கு தயாராக இருந்த சுமார் 1000 ஏக்கர் நெற்பயிர்கள் காய்ந்து சேதமடைந்தன. இதற்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர்.

ராணிப்பேட்டை வருவாய்க் கோட்டத்திலுள்ள ஆற்காடு, வாலாஜாபேட்டை, அரக்கோணம் வட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கான குறைதீர் கூட்டம் வருவாய் கோட்ட அலுவலர் பா.முருகேசன் தலைமையில் புதன்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில் விவசாயிகள் கூறியதாவது:

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் வெங்கடேசன்: ராணிப்பேட்டை வருவாய்க் கோட்டத்துக்கு உள்பட்ட வாலாஜாபேட்டை, அரக்கோணம் ஆகிய வட்டங்களில் ஏற்பட்ட வறட்சி காரணமாக பாணவரம், மேல்வீராணம், காவேரிப்பாக்கம், கர்ணாவூர், நெமிலி, தக்கோலம்,திருமால்பூர் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட பகுதிகளில் பயிரிடப்பட்டு அறுவடைக்கு தயாராக இருந்த சுமார் 1000 ஏக்கர் நெல் பயிர்கள் தண்ணீர் இன்றி காய்ந்து கருகிப் போனது. எனவே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மாவட்ட நிர்வாகம் உரிய இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கூறி அது தொடர்பான மனுவை அளித்தார்.

மேலும் வேலூரை வறட்சி மாவட்டமாக அறிவிக்கக் கோரி மாவட்ட நிர்வாகத்தை விவசாயிகள் வலியுறுத்தி வரும்நிலையில் பொதுத்துறை வங்கிகளில் விவசாயிகள் பெற்ற கடனுக்காக ஜப்தி நடவடிக்கை

எடுக்கப்படும் என மிரட்டுகின்றனர். இதுகுறித்தும் மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

விவசாயிகள் சங்க மாவட்டத் துணைச் செயலாளர் எல்.சி.மணி: ராணிப்பேட்டையில் சிப்காட் 1,2,3 தொழிற்பேட்டை, முகுந்தராயபுரம் ஊராட்சியில் இரண்டு சிறப்பு பொருளாதார மண்டலங்களுக்கு என ஆயிரக்கணக்கான ஏக்கர் விளை நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு தொழிற்பேட்டைகள் உருவாக்கப்பட்டு செயல்பட்டுவருகின்றன. இதில் பொதுத்துறை நிறுவனமான பெல் மட்டுமே நிலம் வழங்கிய விவசாயிகளுக்கு வேலை வழங்கியுள்ளது. ஆனால் மற்ற எந்த நிறுவனங்களும் இங்குள்ளவர்களுக்கு வேலை வழங்காமல் வடமாநிலத் தொழிலாளர்களுக்கு குறைந்த கூலி கொடுத்து எந்தவித பாதுகாப்பு நடைமுறைகளையும் பின்பற்றாமல் செயல்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் மருதம்பாக்கம், கத்தாரிகுப்பம், ஏகாம்பரநல்லூர், கொண்டகுப்பம் ஆகிய ஊராட்சி பகுதிகளில் சிப்காட் பகுதி-4 அமைக்க பல ஏக்கர் விவசாய நிலங்களை கையகப்படுத்தும் நடவடிக்கையில் அரசு நிர்வாகம் இறங்கியுள்ளது. ஏற்கெனவே சிறப்பு பொருளாதார மண்டலங்களுக்காக கையகப்படுத்தப்பட்ட விவசாய நிலங்கள் பயன்படுத்தப்படாமல் உள்ளது. எனவே சிப்காட் பகுதி 4 அமைய தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கடுமையாக எதிர்க்கிறது என்றார்.

விவசாய சங்கப் பிரதிநிதி நிலவு குப்புசாமி: மாவட்டத்தில் உள்ள கரும்பு உற்பத்தி விவசாயிகளிடம் இருந்து சர்க்கரை ஆலைகள் டன்னுக்கு ரூ.200 பிடித்தம் செய்துள்ளன. ஆனால் அந்த தொகைக்கான விவரம் சர்க்கரை ஆலை நிர்வாகம் இதுவரை தெரியப்படுத்தவில்லை. அந்த பணம் எப்போது விவசாயிகளுக்கு தரப்படும் எனக் கேட்டார்.

வருவாய்க் கோட்ட அலுவலர் பா.முருகேசன்: அரக்கோணம், வாலாஜா வட்டங்களில் அறுவடைக்கு தயாராக இருந்த நெல் பயிர்கள் வறட்சி

காரணமாக காய்ந்த போனது குறித்த மனு மாவட்ட ஆட்சியரின் பார்வைக்கு அனுப்பப்படும். மேலும் நவ்லாக் அரசு பண்ணை தினக்கூலி தொழிலாளர்களுக்கு சேரவேண்டிய ஊதிய நிலுவைத் தொகை ரூ.13 லட்சம் வரப்பெற்றுள்ளதாக அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தத் தொகை இரண்டு நாள்களில் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. தொடர்ந்து காரை பகுதியில் சுமார் 500 ஏக்கர் விளை நிலம் தொழிற்சாலைகளின் கழிவுநீர் தேங்கி விவசாயம் செய்ய முடியாத நிலை உள்ளது என புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து மாவட்ட நிர்வாகத்துக்கு தெரிவிக்கப்படும் என்றார்.

இந்தக் கூட்டத்தில் வேளாண்மை துறை, மின்துறை, போக்குவரத்து துறை உள்ளிட்ட அனைத்து துறை அதிகாரிகள் கலந்துகொண்டனர். மாவட்ட சுற்றுச்சூழல் துறை அதிகாரிகள் கலந்துகொள்ளவில்லை என விவசாயிகள் தரப்பில் புகார் தெரிவிக்கப்பட்டது.

**தூத்துக்குடியில் பேரிடர் மேலாண்மை பயிற்சி**

தூத்துக்குடியில் பள்ளி மாணவர், மாணவிகள் பயன்பெறும் வகையில் பேரிடர் மேலாண்மை குறித்த பயிற்சி புதன்கிழமை அளிக்கப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டத்தில் கடலோரப் பகுதியில் உள்ள பள்ளி மாணவர், மாணவிகளுக்கு இயற்கை சீற்றங்களில் இருந்து தங்களை பாதுகாத்துக் கொள்வது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

அதன்படி தூத்துக்குடி சாமுவேல்புரத்தில் உள்ள மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் புதன்கிழமை பேரிடர் மீட்பு குறித்த பயிற்சி தூத்துக்குடி வட்டாட்சியர் சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

அரக்கோணத்தில் உள்ள தேசிய பேரிடர் மீட்பு குழுவைச் சேர்ந்த அதிகாரிகள் மற்றும் தீயணைப்பு படையினர் பயிற்சி அளித்தனர். தேசிய பேரிடர் மீட்பு படையின் ஆய்வாளர் ராமசந்திரன் கலந்துகொண்டு

சுனாமி, பூகம்பம், மழை, வெள்ளம் உள்ளிட்ட இயற்கை சீற்றங்களில் இருந்து மாணவர்கள் தங்களை பாதுகாத்து கொள்வது குறித்து செய்முறை விளக்கம் அளித்தார்.

இதில், பள்ளித் தலைமையாசிரியர் ஜாய்,ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர்.

**ஜூலை 21 முதல் எள் ஏலம்**

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில், வரும் ஜூலை 21-ஆம் தேதி முதல் பிரதி செவ்வாய்க்கிழமை எள் ஏலம் நடத்தப்பட உள்ளது.

இதுகுறித்து, மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன் புதன்கிழமை வெளியிட்ட செய்தி: தரமான விளைபொருள்களுக்கு அதிக விலை கிடைக்க வாய்ப்புள்ளதால், எள் சாகுபடி செய்த விவசாயிகள் கல், மண், தூசி நீக்கி நன்கு உலர வைத்து பென்னாகரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு எடுத்து வந்து விற்பனை செய்யலாம்.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் சரியான எடை, பகிரங்க மற்றும் மறைமுக ஏலம் மூலம் நல்ல விலை பெறுதல், உடனடி பணப்பட்டுவாடா கிடைக்கும். இச் சேவைகளுக்கு விவசாயிகளிடம் கட்டணம் ஏதும் வசூலிக்கப்படுவதில்லை.

விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்வதோடு, சந்தேகங்களுக்கு ஒழுங்குமுறை விற்பனைக்கூட மேற்பார்வையாளரை 94428 24241 என்ற செல்லிடப் பேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்றார்.

**காடை வளர்ப்பு இலவசப் பயிற்சி**

காடை வளர்ப்பு, பராமரிப்பு முறைகள் குறித்து, ஒரு நாள் இலவசப் பயிற்சி வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 21-ஆம் தேதி நடைபெற உள்ளது.

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் பி.மோகன் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

இந்தப் பயிற்சியில், ஜப்பானியக் காடை இனங்கள், கொட்டகை அமைத்தல், வளர்ப்பு முறைகள், இறைச்சி, முட்டை உற்பத்திக்குத் தேவையான தீவன அளவுகள், முட்டைகளைச் சேகரித்து குஞ்சு பொரிக்கும் விதம், நோய்கள், அதைத் தடுக்கும் முறைகள், ஜப்பானியக் காடை உற்பத்தி பொருளாதாரம் குறித்த பயிற்சி நடைபெற உள்ளது.

இதில், விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள், ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம்.

விருப்பமுள்ளவர்கள் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி, ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் செயல்பட்டு வரும் வேளாண் அறிவியல் நிலையத்துக்கு நேரிலோ அல்லது 04286-266345, 266244, 266650 என்ற தொலைபேசி எண்களிலோ, வரும் 20-ஆம் தேதிக்குள் முன்பதிவு செய்து கொள்ள வேண்டும்.

பயிற்சிக்கு வரும் விவசாயிகள் ஆதார் எண்ணை கண்டிப்பாகப் பதிவு செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தேசிய வேளாண் பயிர் காப்பீட்டுத் திட்டம்:வெள்ளை அறிக்கை வெளியிட வலியுறுத்தல்**

தேசிய வேளாண் பயிர் காப்பீட்டு திட்டத்தில் விவசாயிகளிடமிருந்து எத்தனை லட்சம் கோடி ரூபாய் பிடித்தம் செய்யப்பட்டது, அதில் எத்தனை கோடி ரூபாய் இழப்பீடு வழங்கப்பட்டது என்பது குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்டம் ஒருவந்தூர் நீரேற்று பாசன கூட்டுறவு சங்கத் தலைவர் செல்ல.ராசாமணி வெளியிட்ட அறிக்கை: 2015 ஆம் ஆண்டு பருவத்துக்கு தேசிய பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் வங்கியில் கடன்பெறும் விவசாயிகளுக்கு ரூ.ஒரு லட்சத்துக்கு ரூ.3,750 காப்பீட்டு பிரிமியம் செலுத்த வேண்டும் எனவும், 20 பயிர்களுக்கு கட்டாயம் பிரிமியம் பிடித்தம் செய்ய வேண்டும் எனவும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தில் தனி நபர், குறிப்பிட்ட ஒரு பகுதியில் வெள்ளச்சேதம், வறட்சியால் பாதிக்கப்பட்டால் நிவாரணம் பெற முடியாது.

வட்ட அளவில் பயிர் சேதம் ஏற்பட்டால் மட்டுமே நிவாரணம் பெற முடியும்.

கடந்த 2013-14 ஆம் ஆண்டில் தஞ்சை, புதுக்கோட்டை, திருச்சி, நாமக்கல், தூத்துக்குடி, ஈரோடு, கோவை, தேனி, கன்னியாகுமரி உள்ளிட்ட மாவட்டங்களில் பல ஆயிரம ஏக்கரில் வாழை சூறாவளி காற்றினால் ஒடிந்து சேதமடைந்தது. இதில் பாதிக்கப்பட்ட ஒரு விவசாயிக்குக் கூட நிவாரணம் வழங்கப்படவில்லை.

விவசாயிகளிடமிருந்து பல கோடி ரூபாய் பிரீமியம் பெறும் காப்பீட்டு நிறுவனம், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்காமல் மோசடி செய்து வருகிறது.

விவசாயி தனிப்பட்ட முறையில் பயிர் இழப்பு ஏற்படும்போது காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு அளிக்க வேண்டும். இதனைச் செயல்படுத்த முடியாது எனில், தேசிய வேளாண் பயிர் காப்பீட்டு திட்டத்தை உடனடியாக திரும்பப் பெற வேண்டும்.

மேலும், தேசிய வேளாண் காப்பீட்டு திட்டம் தொடங்கப்பட்டது முதல் விவசாயிகளிடமிருந்து இதுவரை எத்தனை லட்சம் கோடி ரூபாய் பிடித்தம் செய்யப்பட்டது. இதில் எத்தனை கோடி ரூபாய் இழப்பீடு

வழங்கப்பட்டுள்ளது என்பது குறித்து மத்திய வேளாண் துறை வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்.

கட்டாய காப்பீட்டுத் திட்டத்தில் விவசாயிகளிடமிருந்து பணம் பிடித்தம் செய்வதை வங்கிகள் உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும். தவறும்பட்சத்தில், அனைத்து விவசாய சங்கங்களையும் ஒருங்கிணைத்து சென்னையில் மிகப் பெரிய அளவில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அரியலூர் மாவட்டத்தில் ரூ. 98.66 லட்சத்தில் 5 கால்நடை மருந்தகங்கள்**

அரியலூர் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில், ரூ. 98.66 லட்சத்தில் கட்டப்பட்ட 5 கால்நடை மருந்தகங்களை முதல்வர் ஜெயலலிதா புதன்கிழமை காணொலிக்காட்சி மூலம் திறந்துவைத்தார்.

இதைத்தொடர்ந்து, அரியலூர் ஊராட்சி ஒன்றியம், பொய்யூர் கால்நடை மருந்தகப் புதிய கட்டடத்தை மாவட்ட ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் பார்வையிட்டு குத்துவிளக்கேற்றினார்.

நிகழ்ச்சியில் பங்கேற்ற பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி ஆட்சியர் கூறியது: அரியலூர் மாவட்டத்தில் அரியலூர் ஒன்றியம், பொய்யூர் கிராமத்தில் ரூ. 26.66 லட்சத்திலும், திருமானூர் ஒன்றியம், கீழக்காவட்டாங்குறிச்சி கிராமத்தில் ரூ. 15 லட்சத்திலும், செந்துறை ஒன்றியம், பொன்பரப்பி கிராமத்தில் ரூ. 15 லட்சத்திலும், ஜயங்கொண்டம் ஒன்றியம், இரவாங்குடி மற்றும் கூவத்தூர் கிராமத்தில் தலா ரூ. 21 லட்சத்தில் என மொத்தம் ரூ. 98.66 லட்சத்தில் 5 கால்நடை மருந்தகங்களின் புதிய கட்டடங்களை தமிழக முதல்வர் பொதுமக்கள் பயன்பாட்டுக்காக திறந்துவைத்துள்ளார் என்றார் அவர்.

நிகழ்ச்சியில், கால்நடை துறை மண்டல இணை இயக்குநர் ரவிச்சந்திரன், துணை இயக்குநர் மோகன், பொதுப்பணித் துறை உதவிச்

செயற்பொறியாளர் அன்பரசி, உதவிப் பொறியாளர் தேவேந்திரன், கால்நடை உதவி மருத்துவர்கள் சேகர், வேல்முருகன், கார்த்திக் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**கால்நடை மருத்துவ முகாம்**

குத்தாலம் வட்டம், பண்டாரவாடை ஊராட்சியில் கால்நடைகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

நாகை மாவட்ட ஊராக வளர்ச்சித்துறை, புதுவாழ்வுத் திட்டம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை இணைந்து நடத்திய முகாமுக்கு புது வாழ்வுத் திட்ட, மாவட்ட மேலாளர் பா. மணிராஜ் தலைமை வகித்தார். ஊராட்சித் தலைவர் சுகுணா தில்லைராஜன் முன்னிலை வகித்தார்.

கால்நடை பராமரிப்புத் துறை நாகை மாவட்ட மண்டல இணை இயக்குநர் க. நாகராஜ் முகாமை தொடங்கிவைத்து பேசும்போது,

முகாமில் செயற்கை முறை கருவூட்டல், நீண்ட நாட்களாக சினைப் பிடிக்காத கால்நடைகளுக்கு சிகிச்சையளித்தல், வெள்ளாடுகள் மற்றும் கன்றுகளுக்கு குடற்புழு நீக்குதல் உள்ளிட்டவைகளுக்கு சிகிச்சையளிக்கப்படவுள்ளது. மேலும் சிறந்த கால்நடை வளர்ப்போர்களுக்கு பரிசுகளும் வழங்க்கப்படவுள்ளன என்றார்.

தொடர்ந்து,நடைபெற்ற விழாவில் சிறந்த கால்நடை வளர்ப்போர் 3 பேர் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் கே.தமிழ்ச்செல்வன்,கால்நடை மருத்துவர் மணித்தமிழ், புதுவாழ்வுத்திட்ட உதவி அலுவலர் மனுநீதி சோழன், மற்றும் ஊராட்சி உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

**நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டத்தின் மூலம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டம் 4 அடி உயர்வு கலெக்டர் ஹரிகரன் தகவல்**

திண்டுக்கல்,

நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டத்தின் மூலம் திண்டுக்கல் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் 4 அடி உயர்ந்துள்ளது என்று கலெக்டர் ஹரிகரன் தெரிவித்துள்ளார்.

<u>நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டம்</u>

நீர்வளம் மற்றும் நிலவளத்தை மேம்படுத்துதல், தரிசு நிலங்களை விவசாய நிலங்களாக மாற்றி விவசாயத்தை விரிவு படுத்துதல், தனிநபர் வருமானத்தை பெருக்குவது, நிலமற்ற நபர்கள் சுய தொழில் தொடங்குவதை ஊக்குவிப்பது ஆகியவற்றை நோக்கமாக கொண்டு ஒருங்கிணைந்த நீர் வடிப்பகுதி மேலாண்மை திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திண்டுக்கல் மாவட்டத்தை பொறுத்தவரையில் சாணார்பட்டி, நத்தம், வடமதுரை, குஜிலியம்பாறை, வேடசந்தூர், நிலக்கோட்டை, திண்டுக்கல், தொப்பம்பட்டி, கொடைக்கானல் ஆகிய 9 ஒன்றியங்களில் சுமார் 60 ஆயிரம் ஹெக்டேரில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

<u>கலெக்டர் ஆய்வு</u>

நிலக்கோட்டை ஒன்றியம் சங்கால்பட்டி மற்றும் அவையம்பட்டி ஆகிய நீர் வடிப்பகுதிகளில் இந்த திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்ட கம்பி வலை தடுப்பணை, பண்ணை குட்டை, நிலத்தை சமப்படுத்தி மண் வரப்பு அமைத்தல், தடுப்பணைகள், சொட்டுநீர் பாசனம் மூலம் மாங்கன்று நடவு செய்யும் பணிகள் ஆகியவற்றை கலெக்டர் ஹரிகரன் ஆய்வு செய்தார்.

பின்னர் அவர் கூறும்போது, திண்டுக்கல் மாவட்டத்தில் நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டத்தின் கீழ் 312 தடுப்பணைகளும், 309 பண்ணை குட்டைகளும், 30 நீர் செரிவுகுட்டைகளும், 5 புதிய குளங்களும் அமைக்கப்பட்டு சுமார் 2 ஆயிரத்து 42 லட்சம் லிட்டர் தண்ணீர் பெறப்பட்டுள்ளது. மேலும் சுமார் 6 ஆயிரத்து 23 ஹெக்டேர் புதிய பரப்பு சாகுபடிக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த பணிகளின் மூலம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கிணறு மற்றும் ஆழ்துளை கிணறுகளில் நிலத்தடி நீர்மட்டம் சுமார் 2 அடி முதல் 4 அடி வரை உயர்ந்துள்ளது என்றார்.

## பால்விலை சரிவு: கறவை மாடுகள் விலை குறைந்தது விவசாயிகள் கவலை

சத்திரப்பட்டி

ஒட்டன்சத்திரம் பகுதியில் பால்விலை சரிந்து வருவதால் கறவை மாடுகளின் விலையும் குறைந்தது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

### கறவை மாடுகள்

ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி ஒன்றியங்கள் மற்றும் வடகாடு மலைப்பகுதிகளில் ஏராளமான விவசாயிகள் கால்நடைகளை வளர்த்து வருகிறார்கள். கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு இந்த பகுதியில் கறவை மாடுகள் ரூ.50 ஆயிரம் முதல் ரூ.70 ஆயிரம் வரை விற்பனை செய்யப்பட்டு வந்தன.

திண்டுக்கல் மாவட்டத்தில் பால் உற்பத்தி அதிகரிப்பு மற்றும் ஒருசில தனியார் பால் நிறுவனங்கள் வாரத்தில் ஒருநாள் விவசாயிகளிடம் இருந்து பாலை கொள்முதல் செய்யாமல் இருப்பது போன்ற காரணங்களால் கறவை மாடுகளின் விலை குறைந்து வருகிறது.

தற்போது கறவை மாடுகள் ரூ.20 ஆயிரம் முதல் ரூ.40 ஆயிரம் வரை மொத்த வியாபாரிகளால் வாங்கப்படுகிறது.

பால் விலை

இதேபோல் பசும்பால் ஒரு லிட்டர் ரூ.18 முதல் ரூ.20 வரையும், எருமைப்பால் ரூ.25 முதல் ரூ.30 வரையும் விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்படுகிறது. சில்லறை விலையில் ஒரு லிட்டர் பசும்பால் ரூ.30–க்கும், எருமைப்பால் ரூ.40 முதல் ரூ.45 வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது.

இதுகுறித்து சத்திரப்பட்டியை சேர்ந்த விவசாயிகள் கூறும்போது, மாட்டுத்தீவன விலை உயர்வு, கறவை மாடுகளின் பராமரிப்பு செலவு மற்றும் கால்நடை மருந்துகளின் விலை உயர்வு காரணமாக விவசாயிகள் கஷ்டப்பட்டு வருகிறார்கள். இந்த நிலையில் பால் விலை குறைவு காரணமாக விவசாயிகளுக்கு தினமும் ஆயிரக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டு வருகிறது.

எனவே தமிழக அரசு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து விவசாயிகள், ஆவின் மற்றும் தனியார் பால் நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி பால் உற்பத்தியாளர்களின் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும், என்றனர்.

**விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் 24–ந் தேதி நடக்கிறது**

காஞ்சீபுரம்

காஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர் வி.கே.சண்முகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

காஞ்சீபுரம் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வருகிற 24–ந் தேதி (வெள்ளிக்கிழமை) காலை 11 மணிக்கு, காஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்ட அரங்கில் மாவட்ட கலெக்டர் தலைமையில் நடைபெற உள்ளது.

மேற்படி கூட்டத்தில் விவசாய பெருமக்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு முக்கிய வேளாண்மைத்துறை மற்றும் சார்பு துறைகள் தொடர்பான கோரிக்கை மனுக்களை அளிக்கலாம்.
இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**புதுக்கோட்டை மாவட்டத்திற்கு விலையில்லா கறவைப்பசு, வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்திற்கு ரூ.9.27 கோடி நிதி ஒதுக்கீடு கலெக்டர் கணேஷ் தகவல்**

புதுக்கோட்டை மாவட்டத்திற்கு விலையில்லா கறவைப்பசு, வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்திற்கு ரூ.9.27 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என கலெக்டர் கணேஷ் தகவல் கூறினார்.கிராம அளவிலான குழுக்கூட்டமபுதுக்கோட்டை நகர்மன்றத்தில் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் விலையில்லா கறவைப் பசு, வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் பயனாளிகளை தேர்வு செய்யும் வழிமுறைகள் குறித்து கிராம அளவிலான குழுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு கலெக்டர் கணேஷ் தலைமை தாங்கி பேசியதாவது:-

தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதா கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் பல்வேறு நலத்திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி தமிழக அரசு கிராம புறங்களில் உள்ள ஏழை, எளிய பொதுமக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தும் வகையில் விலையில்லா கறவை பசுக்கள், வெள்ளாடுகள் வழங்க உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளை தேர்வு செய்யும் முறைகள் குறித்த எடுத்துரைக்க கிராம அளவிலான குழுக்கூட்டம் நடந்து வருகிறது.
நிதி ஒதுக்கீடு

புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழக அரசு 2015-16-ம் நிதி ஆண்டிற்கு விலையில்லா கறவைப்பசு, வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்திற்கு ரூ.9.27 கோடி நிதி ஒதுக்கீடு செய்து உள்ளது. இவ்வாறு அவர் பேசினார். கூட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் மோகனரங்கன், உதவி இயக்குனர் காளிதாஸ், துணை இயக்குனர் ரவீந்திரன், உதவி இயக்குனர் தேவதாஸ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**உழவர்சந்தைகளில் ரூ.51 லட்சத்துக்கு காய்கறிகள் விற்பனை**

சேலம் மாவட்டத்தில் அம்மாபேட்டை, அஸ்தம்பட்டி, சூரமங்கலம் உள்ளிட்ட 11 இடங்களில் உழவர் சந்தைகள் செயல்பட்டு வருகிறது. இங்கு விவசாயிகள் தாங்கள் விளைவிக்கும் காய்கறிகளை விற்பனைக்காக கொண்டு வருவது வழக்கம். உழவர் சந்தைகளில் பண்டிகை மற்றும் விஷே நாட்களில் காய்கறி விற்பனை அதிகளவில் நடைபெறும். இந்தநிலையில் நேற்று ஆனி அமாவாசையையொட்டி உழவர்சந்தைகளில் அகத்திகீரை, வாழை இலை, வாழைப்பழம், கத்திரிக்காய், வெண்டைக்காய், பூசணிக்காய், வெற்றிலை உள்ளிட்ட பொருட்கள் விற்பனை அமோகமாக நடைபெற்றது. 11 உழவர் சந்தைகளில் 1142 விவசாயிகள் 203 டன் காய்கறிகள் கொண்டு வந்திருந்தனர். இவை ரூ.51 லட்சத்து 33 ஆயிரத்து விற்பனையானது. காய்கறிகளை 44 ஆயிரத்து 280 நுகர்வோர்கள் வாங்கிச் சென்றனர்.

**முதல்போக பாசனத்திற்காக வைகை அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது**

ஆண்டிப்பட்டி,

வைகை–பெரியாறு இருபோக பாசன நிலங்களில் முதல்போக பாசனத்திற்காக வைகை அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது. அணையில் இருந்து வெளியேறிய தண்ணீரில் மதுரை, தேனி மாவட்ட கலெக்டர்கள் மலர் தூவினர்.

வைகை அணை திறப்பு

தென்மேற்கு பருவமழை காரணமாக முல்லைப்பெரியாறு அணைக்கு நீர்வரத்து ஏற்பட்டது. இதனையடுத்து பெரியாறு அணையில் இருந்து கூடுதல் தண்ணீர் திறக்கப்பட்டது. இந்த தண்ணீரின் மூலம் 71 அடி உயரம் கொண்ட வைகை அணை 51 அடியை எட்டியது. இதைத் தொடர்ந்து முதல்போக பாசனத்திற்காக வைகை அணையில் இருந்து தண்ணீர் திறக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

அவர்களின் கோரிக்கையை ஏற்று அணையில் இருந்து தண்ணீர் திறக்க முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டார். இதனைதொடர்ந்து நேற்று மதியம் 1.30 மணிக்கு தேனி மாவட்ட கலெக்டர் வெங்கடாசலம், மதுரை மாவட்ட கலெக்டர் சுப்பிரமணியம் ஆகியோர் மதகை திறந்து வைத்தனர். இதனால் சிறிய மதகுகள் வழியாக தண்ணீர் சீறிப்பாய்ந்து சென்றது. அணையில் இருந்து வெளியேறிய தண்ணீரில் கலெக்டர்கள் மலர்களை தூவினர். அணையில் இருந்து பாசனத்திற்கு வினாடிக்கு 900 கனஅடியும், மதுரை–சேடப்பட்டி கூட்டுக்குடிநீர் திட்டங்களுக்காக

**வினாடிக்கு 60 கனஅடியும் சேர்த்து மொத்தம் 960 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது.**

பாசன வசதி

அந்த தண்ணீர் பாசன கால்வாய் வழியாக திருப்பி விடப்பட்டது. இந்த தண்ணீரின் மூலம் மதுரை மாவட்டத்தில் வடக்கு தாலுகா பகுதிகளில் உள்ள 29 ஆயிரத்து 501 ஏக்கரும், வாடிப்பட்டி தாலுகா பகுதியில் 13 ஆயிரத்து 747 ஏக்கரும், திண்டுக்கல் மாவட்டத்தில் 1,793 ஏக்கரும் என மொத்தம் 45 ஆயிரத்து 41 ஏக்கர் பாசன வசதி பெறும். அணையில் இருந்து பாசனத்திற்காக தொடர்ந்து 120 நாட்களில் 6 ஆயிரத்து 739 மில்லியன் கனஅடி தண்ணீர் திறக்கப்படும் என்றும், விவசாயிகளின் தேவையை கருத்தில் கொண்டு கூடுதலாக திறப்பது குறித்து பின்னர் முடிவு செய்யப்படும் என்று பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்று காலை 6 மணியளவில் வைகை அணையின் நீர்மட்டம் 51.57 அடியாக காணப்பட்டது. அணைக்கு வினாடிக்கு 815 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்த நிலையில், அணையில் இருந்து வினாடிக்கு 60 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. அணையின் மொத்த நீர்இருப்பு 2,205 மில்லியன் கனஅடியாக இருந்தது.

**வாரச்சந்தையில் வியாபாரிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு 10 டன் காய்கறிகள் விற்பனை**

உத்தமபாளையம்

உத்தமபாளையம் வாரச்சந்தையில் காய்கறிகள் விற்பனை செய்யும் வியாபாரிகளின் எண்ணிக்கை அதிகரித்தது. இதனால் 10 டன் காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டது.

வாரச்சந்தை: உத்தமபாளையம் பேரூராட்சியில் சுமார் 45 ஆண்டுகளுக்கு பிறகு வாரச்சந்தை அமைக்கப்பட்டு உள்ளது. இந்த சந்தை சென்ற வாரம்

முதல் செயல்படத் தொடங்கியது. முதல் வாரத்திலே சுமார் 5 டன் காய்கறிகள் விற்றது. கடந்த வாரம் 50–க்கும் மேற்பட்ட கடைகள் இருந்தன.

சின்னமனூர், தேவாரம், கோம்பை, உள்ளிட்ட காய்கறி வியாபாரிகளின் வருகை நேற்று அதிகரித்தது. இதனால் 120 கடைகள் அமைக்கப்பட்டு இருந்தன. சந்தையில் கடை அமைக்க போதிய இடம் இன்றி வியாபாரிகள் தவித்தனர். இதனால் அவர்கள் தேசிய நெடுஞ்சாலையோரத்தில் கடைகளை அமைத்தனர். மாலையில் பொதுமக்கள் கூட்டம் அதிகம் காணப்பட்டது. இதனால் போக்குவரத்தை சீரமைக்க கூடுதல் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

<u>விலை நிலவரம்</u>

வாரச்சந்தையில் காய்கறிகளின் நேற்று விலை விவரம் வருமாறு:–

கத்திரிக்காய் ஒரு கிலோ ரூ.15, தக்காளி கிலோ ரூ.25 வெண்டக்காய் கிலோ ரூ.15, அவரை கிலோ ரூ.20, பாகற்காய் கிலோ ரூ.30, நூக்கல் கிலோ ரூ.15, உருளைக்கிழங்கு கிலோ ரூ.15, சின்னவெங்காயம் கிலோ ரூ.40, பல்லாரி கிலோ ரூ.30, முருங்கைகாய் கிலோ ரூ.30, பீன்ஸ் கிலோ ரூ.30, பீட்ரூட் கிலோ ரூ.8, கேரட் கிலோ ரூ.30, சுரைக்காய் கிலோ ரூ.8–க்கு விற்பனை செய்யப்பட்டது.

இதுகுறித்து பொதுமக்களிடம் கேட்ட போது, ‘கடந்த வாரத்தை காட்டிலும் இந்த வாரம் கூடுதல் கடைகள் அமைத்துள்ளனர். காய்கறிகள் விலை ஒவ்வொரு கடைக்கும் வேறுபாடு அதிகம் உள்ளது. அதே நேரத்தில் மளிகைகடைகள் குறைந்த எண்ணிக்கையில் உள்ளன. அவை கூடுதல் கடைகள் அமைக்கவேண்டும். மாலை நேரங்களில் 6 மணிக்கு மேல் கடைகள் இருப்பதால் சந்தை பகுதிகளில் மின்விளக்குகள் அமைக்கவேண்டும்’ என்றனர்.

கூடுதல் இடவசதி

இதுகுறித்து வியாபாரிகளிடம் கேட்ட போது, 'சந்தைக்கு உத்தமபாளையம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராம மக்கள் அதிக அளவில் வருகின்றனர். கடை அமைக்க போதிய அளவு இடவசதி இல்லை கூடுதல் கடைகளை அமைக்க இடவசதியை ஏற்படுத்தி தர பேரூராட்சி நிர்வாகம் முன் வரவேண்டும். சுமார் 10 டன் காய்கறிகள் நேற்று விற்பனை செய்யப்பட்டது' என்றனர்.

**தென்மேற்கு பருவமழை தீவிரம் 5 மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு**

சென்னை: தமிழகத்தில் தொடர்ந்து நிலவி வரும் வெயிலின் தாக்கம் படிப்படியாக குறையத்தொடங்கியுள்ளது. மேலும், வெப்ப சலனத்தால் வளி மண்டல மேல் அடுக்கில் ஏற்பட்டுள்ள காற்று சுழற்சி காரணமாக தமிழகத்தில் ஒருசில இடங்களில் லேசான மழையும் பெய்து வருகிறது. மேலும், தென் மேற்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளதை அடுத்து கேரளாவிலும் கனமழை பெய்து வருகிறது. இதனால் தமிழகத்தில் பொதுவாக மேகமூட்டம் காணப்படும். நீலகிரி, கோவை, திண்டுக்கல், தேனி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது

**ஒரு பக்கம் வறட்சி: மறுபக்கம் குளறுபடி கடன்களை தள்ளுபடிசெய்ய விவசாயிகள் எதிர்பார்ப்பு**

சிவகங்கை, : ஒரு பக்கம் வறட்சியும் மறுபக்கம் கணக்கெடுப்பில் குளறுபடியும் நீடித்து வருவதால் அனைத்து கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்பு விவசாயிகளிடம் ஏற்பட்டுள்ளது.சிவகங்கை மாவட்டத்தில் சுமார் 1 லட்சத்து 5 ஆயிரம் எக்டேர் நிலத்தில் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. தென்மேற்கு,

வடகிழக்கு பருவமழை மூலம் ஆண்டிற்கு 904 மி.மீ சாராசரி மழை பெய்ய வேண்டும். ஆனால் கடந்த 2012, 2013 ம் ஆண்டுகளில் மாவட்டம் முழுவதும் போதிய மழை இல்லாமல் கடும் வறட்சி நிலவியது. விவசாயம் செய்த பயிர்கள் அனைத்தும் கருகியது. 2012 ல் வறட்சி மாவட்டமாக அறிவிக்கப்பட்டு காப்பீடு செய்த 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளில் 54 ஆயிரத்து 136 பேர் இழப்பீட்டுத்தொகை பெற தகுதியுடையோர் என கூறப்பட்டது.

இவர்களுக்கு இழப்பீட்டுத்தொகை வழங்க ரூ. 34.50 கோடி அரசு சார்பில் ஒதுக்கப்பட்டது. இந்நிலையில் மாவட்டத்தில் பயிர் இன்சூரன்ஸ் கணக்கெடுப்பில் குளறுபடி நடந்ததாக புகார் எழுந்தது. ஏராளமான விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கப்படாததால் அவர்கள் அதிர்ச்சியடைந்தனர். விவசாயிகள் 2012, 13 ம் ஆண்டுகளில் கூட்டுறவு வங்கி, கிராம வங்கி, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாய நகைக்கடன், பயிர்க்கடன் வாங்கினர். நகைக்கடன் வாங்கிய விவசாயிகளுக்கு வங்கி நிர்வாகங்கள் தொடர்ந்து நோட்டீஸ் அனுப்பியதால் விவசாயிகள் நகைகளை மீண்டும் கூடுதல் தொகைக்கு வங்கியிலேயே திரும்ப வைத்துள்ளனர். நகைகளை திருப்ப முடியாத நிலையில் மீண்டும், மீண்டும் கூடுதல் தொகைக்கு திரும்ப வைப்பதால் கடன் தொகை அதிகரித்துள்ளது.

இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது,‘ கடந் 2012, 13 ம் ஆண்டுகளில் வறட்சியால் விவசாயத்திற்கு செலவிட்ட தொகை அனைத்தும் வீணாகியது. இதனால் பிழைப்பு தேடி பிற மாவட்டங்களுக்கு செல்லும் நிலை ஏற்பட்டது. விவசாயத்திற்காக வங்கியில் வாங்கிய கடனை செலுத்த முடியவில்லை. கிராம வங்கியில் விவசாய நகைக்கடனை ஒரு வருடத்தில் திரும்ப செலுத்தவில்லையெனில் வட்டிக்கு கூடுதல் வட்டி போடுகின்றனர். நகை ஏலத்திற்கு வந்துவிடும் என வங்கி நிர்வாகம்

எச்சரிப்பதால் வட்டி தொகைக்காக கூடுதல் தொகைக்கு நகையை மீண்டும் அடமானம் வைத்து தொடர்ந்து கடனாளியாகவே இருந்து வருகிறோம். 2012 மற்றும் 2013 ம் ஆண்டுகளில் வாங்கப்பட்ட நகைக்கடன் உள்ளிட்ட விவசாயம் சம்பந்தமான அனைத்து கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும்,' என்றனர்.

**கடையம் பகுதியில் மழை எதிரொலி ராமநதி அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு விவசாயிகள் மகிழ்ச்சி**

கடையம்,:கடையம் பகுதியில் பெய்து வரும் கோடை மழையால் வறண்டு கிடந்த ராமநதி அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நெல்லை மாவட்டம் கடையம் அருகே மேற்கு தொடர்ச்சி மலையில் ராமநதி அணை அமைந்துள்ளது. 84 அடி கொள்ளளவு கொண்ட இந்த அணையின் மூலம் ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. இங்கு இரு போகம் நெல் பயிரிடப்படுகின்றது. கடந்த டிசம்பர் மாதம் பருவமழையின் போது பெய்த கனமழையால் ராமநதி அணை முழு கொள்ளளவான 84 அடியை எட்டியது. அப்போது மேல் மட்ட கால்வாய் மட்டும் திறக்கப்பட்டது.தற்போது கோடை காலத்தில் வெயில் கொளுத்தி வந்தது. கடந்த சில நாட்களாக நெல்லை மாவட்டத்தில் கோடை மழை பெய்து வருகிறது. இதனால் வறண்டு வெடிப்பு விழுந்த நிலையில் இருந்த ராமநதி அணையில் கொஞ்சம் நீர் வர துவங்கியுள்ளது. கடந்த 4 ம் தேதி கத்திரி வெயில் எனப்படும் அக்னி நட்சத்திரம் தொடங்கியது. இருந்த போதும் வருண பகவானின் கருணையால் கடையம் பகுதியில் கடந்த ஒரு வாரமாக லேசான மழை பெய்தது.

மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளிலும் மழை பெய்ததால் வறண்ட நிலையில் இருந்த ராமநதி அணை 42 அடியாக நீர்மட்டம் உயர்ந்துள்ளது. அணைக்கு விநாடிக்கு 29 கனஅடி தண்ணீர் வருகிறது. அணையிலிருந்து குடிநீர் வசதிக்காக விநாடிக்கு 10 கனஅடி தண்ணீர் திறக்கப்படுகிறது . அணைப்பகுதியில் 9 மிமீ மழை பதிவாகியுள்ளது. இதனால் விவசாயிகள், பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கடையம் பகுதியை சுற்றியுள்ள பல கிராமங்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதில் ராமநதி அணை தான் உயிர்நாடியாக இருந்து வருகிறது. இந்நிலையில் அணைக்கு வரும் தண்ணீரை பாதுகாப்பாக சேமித்தால் தான் வரப்போகும் நெல் பாசனத்திற்கு பயன்படும். மேலும் ராமநதி அணையை தூர்வாரி மராமத்துபணி மேற்கொண்டால் கூடுதலாக தண்ணீர் சேமிக்க முடியும் என விவசாயிகள் மற்றும் சமூக ஆர்வலர்களின் பல ஆண்டு வேண்டு கோளாக உள்ளது.

**சூரியகாந்தியில் பூச்சி தாக்குதல் அதிகரிப்பு கட்டுப்படுத்த வேளாண்துறை முயற்சி**

பழநி, : சூரியகாந்தி பயிரில் பூச்சி தாக்குதல் அதிகரித்து வருவதால் அதனை கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளை வேளாண்துறை மேற்கொண்டுள்ளது.தமிழகத்தில் சாகுபடி செய்யப்படும் எண்ணெய்வித்து பயிர்களில் நிலக்கடலை, எள், ஆமணக்கு, சூரியகாந்தி ஆகியவை முக்கிய பயிர்களாக உள்ளன. தமிழகத்தில் சுமார் 5.02 லட்சம் எக்டேரில் எண்ணெய்வித்து பயிர்கள் மானாவாரியாகவும், இறவையிலும் சாகுபடி செய்யப்படுகின்றன. இவற்றில் சூரியகாந்திக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. இதன் விளைச்சல் எக்டேருக்கு 2.15 டன்னாக உள்ளது.

தமிழகத்தில் சூரியகாந்தி மானாவாரியில் ஏப்ரலில் இருந்து ஆகஸ்ட் வரை சாகுபடி செய்யப்படும். அதற்கு முன்னதாக விளைநிலத்தில் பாத்தி அமைத்தல், உரமிடுதல், நுண் ஊட்டமிடுதல், ஊட்டச்சத்து கலவை தெளித்தல், விதை அளவு, விதை நேர்த்தி, களை கட்டுப்பாடு, பாசனம் ஆகியவற்றை முறையாக மேற்கொண்டால் அதிக மகசூல் கிடைக்கும் என வேளாண்துறையினர் தெரிவித்திருந்தனர்.

தற்போது சூரியகாந்தியில் பூச்சி தாக்குதல் அதிகரித்துள்ளது. இதை கட்டுப்படுத்துவதற்கான முயற்சியை வேளாண்துறை மேற்கொண்டுள்ளது. இதற்கான வழிமுறைகள் குறித்து விவசாயிகளுக்கு களப்பணியாளர்கள் நேரில் தெரிவித்து வருகின்றனர். இது குறித்து அவர்கள் கூறியிருப்பதாவது:'கோடை மழைக்கு முன் வரப்புகளிலும், நிழலான இடங்களிலும் மண்ணில் புதைந்துள்ள கூட்டுப்புழுக்களை உழவு செய்து வெளிக்கொண்டு வந்து அழிக்க வேண்டும். விளக்குப்பொறி அல்லது தீப்பந்தம் வைத்து தாய் அந்திப்பூச்சிகளைக் கவர்ந்து அழிக்க வேண்டும். பயிர்களில் இடப்பட்டுள்ள முட்டைகளை சேகரித்து அழிக்க வேண்டும்.

பூச்சி தாக்குதலுக்குள்ளான வயல்களை சுற்றி 30 சென்டிமீட்டர் ஆழம், 25 சென்டிமீட்டர் அகலத்தில் செங்குத்தாக குழிகள் அமைத்து புழுக்கள் பாதிக்கப்பட்ட வயல்களில் இருந்து பரவுவதை தடுக்க வேண்டும். எக்ேடருக்கு 25 கிலோ என்ற அளவில் பாசலோன் 4 சதவீதம், கார்பாரில் 10 சதவீதம், பெனிட்ரோதியான் 2 சதவீதம் கலந்து தெளிக்க வேண்டும். 1 எக்டேருக்கு சூடோமோனாஸ் புளூரசன்ஸ் 2.5 கிலோவுடன், 50 கிலோ மக்கிய தொழுவுரத்தை கலந்து தெளிக்க வேண்டும். மேலும் நோய் தென்படும் இடங்களில் கார்பன்டாசிம் லிட்டருக்கு 1 கிராம் என்ற அளவில் கலந்து தெளித்தால் பூச்சிகளின் தாக்குதல் இருக்காது.

இதுதொடர்பான கூடுதல் தகவல்களுக்கு அந்தந்த பகுதி வேளாண் அலுவலர்களையோ அல்லது வேளாண் அலுவலகத்தையோ தொடர்பு கொள்ளலாம் என வேளாண்துறையினர் தெரிவித்து வருகின்றனர்.

மீன் விலை கடும் உயர்வு

பரமக்குடி, : பரமக்குடி மீன் மார்க்கெட்டில் வியாபாரிகள் மீன்கள் விலையை முடிந்து அளவு அதிகரித்து விற்கின்றனர். பொதுமக்களும் வேறு வழியில்லாமல் கூடுதல் விலைகொடுத்து அதிருப்தியுடன் மீன்களை வாங்கிச்செல்கின்றனர்.

மார்க்கெட்டில் சீலா மீன் கிலோ ரூ.400க்கும், விலைமீன், கிழங்கான், மாவுளா, நகரை போன்ற மீன்கள் கிலோ ரூ.300க்கும், கல்நண்டு கிலோ ரூ.250க்கும், இறால் மீன் கிலோ ரூ.400க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. விலை உயர்வு காரணத்தால் அசைவ பிரியர்கள் ஆடு, கோழி இறைச்சியை விரும்பி வாங்கி உண்கின்றனர்.

இதனால் பரமக்குடி பகுதியில் ஆடு, கோழி இறைச்சி விலையும் உயர்ந்துள்ளது. தற்போது ஆட்டிறைச்சி கிலோ ரூ.450க்கும், கோழிக்கறி கிலோ ரூ.110க்கும் விற்பனை செய்யப்படுகிறது. விலை ஏற்றத்தால் ஒரு சில அசைவ பிரியர்கள் காய்கறிகளுக்கு மாறி வருவதும் குறிப்பிடத்தக்கது. தரம் இருந்தாலும் மீன்களின் கூடுதல் விலையை மீன் வியாபாரி சங்கத்தினர் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பொதுமக்கள் கூறுகின்றனர்.

**மக்காச்சோளம் குவின்டால் ரூ.1,500 ஆக உயர்வு**

கோவை, : மக்காச்சோளம் விலை நீண்ட நாட்களுக்கு பிறகு நேற்று உடுமலையில் குவின்டாலுக்கு ரூ.50 உயர்ந்து ரூ.1,500க்கு விற்றது.

கோவை, திருப்பூர் மாவட்டத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை

கூடங்களில் வேளாண் விளைபொருட்களின் நேற்றைய (15ம் தேதி) விலை விபரம் வருமாறு:

மஞ்சள் ஒரு குவின்டால் கோவையில் தனி விரலி மஞ்சள் ரூ.6,869 முதல் ரூ.7,129 வரை, தனி கிழங்கு மஞ்சள் ரூ.6,433 முதல் ரூ.6,751 வரை. தேங்காய் (100 காய்) உடுமலையில் ரூ.1,250 முதல் ரூ.2.200 வரை, காரமடையில் ரூ.1,800 முதல் ரூ.1,900 வரை, செஞ்சேரியில் ரூ.1,250 முதல் ரூ.1,400 வரை, நெகமத்தில் ரூ.1,450 முதல் ரூ.1,550 வரை, சூலூரில் ரூ.1,350 முதல் ரூ.1,450 வரை. கிணத்துக்கடவில் ரூ.1,200 முதல் ரூ.1,400 வரை, அன்னூரில் ரூ.1,200 முதல் ரூ.1,400 வரை, பொள்ளாச்சியில் ரூ.900 முதல் ரூ.1,280 வரை. திருப்பூரில் ரூ.1,300 முதல் ரூ.1,500 வரை, ஆனைமலையில் ரூ.640 முதல் ரூ.1,430 வரை, அவிநாசியில் ரூ.1,360 முதல் ரூ.1,460 வரை. மக்காச்சோளம் (ஒரு குவின்டால்) உடுமலையில் ரூ.1,400 முதல் ரூ.1,500 வரை, பொங்கலூரில் ரூ.1,300 முதல் ரூ.1,450 வரை, நிலக்கடலை சேவூரில் ரூ.5,530 முதல் ரூ.5,710 வரை, கொண்டைக்கடலை உடுமலையில் ரூ.4,800 முதல் ரூ.5,200 வரை, சோளம் திருப்பூரில் ரூ.2,200 முதல் ரூ.2,400 வரை, கம்பு திருப்பூரில் ரூ.1,200 முதல் ரூ.1,400 வரை, ராகி திருப்பூரில் ரூ.1,500 முதல் ரூ.1,700 வரை விலை நிலவியது.இதில் மக்காச்சோளம் விலை நீண்ட நாட்களுக்கு பிறகு உடுமலையில் குவின்டாலுக்கு ரூ.50 உயர்ந்து ரூ.1,500க்கு விற்றது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

**கால்நடைகளுக்கு சிறப்பு மருத்துவ முகாம்**

திருச்சி, : திருச்சி மாவட்டத்தில் கால்நடை பராமாரிப்புத்துறை சார்பில் கால்நடை சிறப்பு மருத்துவ முகாம்கள் இன்று துவங்கி 24ம் தேதி வரை நடக்கிறது.திருச்சி மண்டலத்தில் கால்நடை பராமரிப்புத்துறை மூலம்

கால்நடை பாதுகாப்பு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. கால்நடை மருந்தகங்கள் மற்றும் கால்நடை கிளை நிலையங்கள் இல்லாத குக்கிராமங்களில் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகிறது. இதில் செயற்கை முறை கருவூட்டல், குடற்புழு நீக்க சிகிச்சை, மலடு நீக்க சிகிச்சை அளிக்கப்படுகிறது.

முசிறி ஊராட்சி ஒன்றியம் தண்டலைப்புத்தூர் கால்நடை மருந்தகத்தில் பூசாரிப்பட்டி கிராமத்துக்கு உட்பட்ட கால்நடைகளுக்கு 15ம் தேதி முகாம் நடக்கிறது. துறையூர் யூனியன் நாகலாபுரம் கால்நடை மருந்தகத்தில் புளியம்பட்டி கிராமத்துக்கு உட்பட்ட கால்நடைகளுக்கு 18ம் தேதி, திருவெறும்பூர் யூனியனில் கீழமுல்லக்குடி கால்நடை மருந்தகத்தில் வளன்நகர் கிராமத்துக்கு உட்பட்ட கால்நடைகளுக்கு 21ம் தேதி சிறப்பு முகாம்கள் நடத்தப்படுகிறது. முசிறி யூனியன் புலிவலம் கால்நடை மருந்தகத்தில் சாத்தனூர் கிராமத்துக்கு உட்பட்ட கால்நடைகளுக்கு 22ம் தேதி, மருங்காபுரி யூனியன் மருங்காபுரி கால்நடை மருந்தகத்தில் முடுக்குப்பட்டி கிராமத்துக்கு உட்பட்ட கால்நடைகளுக்கு 22ம் தேதி, துறையூர் யூனியன் தோனூர் கால்நடை மருந்தகத்தில் கோம்பைபுதூர் கிராமத்துக்கு உட்பட்ட கால்நடைகளுக்கு 24ம் தேதி, முசிறி யூனியன் புத்தனாம்பட்டி கால்நடை மருந்தகத்தில் அபினிமங்கலம் கிராமத்துக்கு உட்பட்ட கால்நடைகளுக்கு 24ம் தேதி முகாம்கள் நடத்தப்படுகிறது.